பக்கங்கள்: 15

# காலைக்கதிர்
Kālaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 புரட்டாதி 14 செவ்வாய்க்கிழமை 01.10.2019 கதிர் 330

### இனி இது ரகசியம் அல்ல!

கோட்டாபய ராஜபக்ஷவின் நிலைமை அந்தோ பரிதாபம்!

கடைசி நேரம் வரை கழுத்தறுப்பும் இழுபறியும்தான்.

கைக்கெட்டியது வாய்க்கு எட்டாமல்போய்விடுமோ என்ற நிலைமை.

அண்ணன் மஹிந்தருடன் மல்லுக்கட்டி நின்று,

பக்கம் 02



# கோட்டாபய ஜனாதிபதியானால் தமிழ் மக்களுக்கு நன்மையே!

## நீதியரசர் விக்னேஸ்வரன் புது விளக்கம்

யாழ்ப்பாணம், ஒக். 01

கோட்டாபய வென்றால் தமிழர்கள் மீண்டும் பழைய நிலைக்குப் போய் விடுவார்கள் என்று தமிழர்கள் அஞ்சுவது புரிகின்றது. அவ்வாறு அவர் நடந்து கொள்ளமாட்டார் என்றே தோன்றுகின்றது. அந்த அளவுக்கு உலக நாடுகள் அவரை உற்று நோக்கிக் கொண்டு

பக்கம் 03

## இலங்கைப் பிரஜாவுரிமையில் சிக்கல்

# வேட்பாளராகும் தகுதியை கோட்டா இழக்கும் ஆபத்து

## நீதிமன்றத்தின் முடிவு வெள்ளியன்று நாளையும் மறுதினமும் விசாரணை

கொழும்பு, ஒக்ரோபர் 01

கோட்டாபய ராஜபக்ஷவின் இலங்கைப் பிரஜாவுரிமை விவகாரம் மீண்டும் நீதிமன்றத்தில் சிக்கலுக்கு உள்ளாகியிருக்கும் நிலையில், அதனால் அவர் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது ஜன பெரமுன சார்பில் வேட்பாளராகப் போட்டியிட முடியாத ஆபத்தும் சில சமயங்களில் ஏற்படலாம் எனக் கூறப்படுகின்றது.

இது தொடர்பான வழக்கை மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் மூன்று நீதியரசர்களைக் கொண்ட ஆயம் நாளையும் மறுதினமும் விசாரித்து இடைக்கால உத்தரவுக் கோரிக்கை தொடர்பான தனது முடிவை அடுத்த நாள் வெள்ளியன்று வழங்கவிருக்கின்றது.

பக்கம் 03

## குடாநாட்டில் மீண்டும் சோதனைச் சாவடிகள்!

யாழ்ப்பாணம், ஒக். 01

யாழ். குடாநாட்டின் பாதுகாப்பு மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், சோதனைச் சாவடிகளும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன.

பக்கம் 03

## கிழக்கிலும் சோதனைகள்

அம்பாறை, ஒக். 01

அம்பாறை மாவட்டத்தின் தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழும் நாவிதன்வெளிப் பகுதியில் புதிய நிரந்திர சோதனைச்சாவடி அமைக்கப்பட்டுள்

பக்கம் 03

## கோட்டா தொடர்பான ஆவணங்களை சமர்ப்பிக்க நீதிமன்றம் நேற்று உத்தரவு

கொழும்பு, ஒக். 01

கோட்டாபய ராஜபக்ஷவுக்கு புதிய அடையாள அட்டை மற்றும் பாஸ்போர்ட்டுகள் வழங்கப்பட்டமை தொடர்பான ஆவணங்களைஉடன்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்

பக்கம் 03

## நீதிமன்றின் முடிவால் அதிர்ச்சியில் பொதுஜன பெரமுன: மாற்று வேட்பாளர் குறித்தும் நேற்று அவசர ஆலோசனை

கொழும்பு,ஒக்.01

கோட்டாபயவின்பிரஜாவுரிமை தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை மேன்முறையீட்டு நீதிமன்றம்நேற்று விசாரணைக்கு ஏற்றுக் கொண்டுள்ளமை மட்டுமல்லாமல், அதில் கோரப்பட்டுள்ள இடைக்காலத் தடை உத்தரவு குறித்துப்

பக்கம் 03

## நேற்று வரையில் 13 பேருக்காக கட்டுப்பணம் செலுத்தப்பட்டது

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக நேற்றும் நான்கு பேர் சார்பில் தேர்தல்கள் ஆணைக் குழுவில் கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது.

நவ சமசமாஜக் கட்சியின் சார்பில் பெத்தேகம நந்திமித்ரவும், சமசமாஜவாதி சமன்தா கட்சியின் சார்பில் வஜிரபானி விஜேசிறி

பக்கம் 03

## மஹிந்தவுக்கு தேசப்பிரிய இரகசியமாக ஆலோசனை

### மாற்று வேட்பாளரைத் தயார் செய்யுமாறு

கொழும்பு, ஒக். 01

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக கோட்டாபய ராஜபக்ஷவுக்குப் பதிலாக இன்னொரு வேட்பாளரைத் தேர்ந்தெடுத்து வைத்துக்கொள்ளுமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்

பக்கம் 02

## எந்த ஜனாதிபதியும் தமிழருக்கு தீர்வைத் தரப்போவதே இல்லை

### அடித்துக் கூறுகிறார் சாள்ஸ் எம்.பி.



கொழும்பு, ஒக். 01

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது யாருக்கு ஆதரவு தெரிவித்தாலும் அரசியல் தீர்வை எந்த ஜனாதிபதியும் எங்களுக்கு தரப்போவது இல்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்ட

பக்கம் 03

## சுதந்திரக் கட்சியின் ஆதரவை கோரியுள்ளாராம் அகிலவிராஜ்

கொழும்பு, ஒக். 01

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலர் அகிலவிராஜ் காரியவசம் ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திரக் கட்சியின் ஆதரவைக் கோரினார் என்று சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி

பக்கம் 02

## ஐ.தே.கட்சியின் தீர்வு யோசனையை தேர்தல் விஞ்ஞாபனத்தில் அறிவியுங்கள்! எங்கள் முடிவை அதன் பின் தெரிவிப்போம் என்கிறார் கூட்டமைப்புத் தலைவர்

கொழும்பு,ஒக்.01

வடக்கு, கிழக்குத் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு என்ன என்பதை ஐக்கிய தேசிய கட்சி ஜனாதிபதி தேர்தலுக்காகத் தான் முன்வைக்கும் தேர்தல் விஞ்ஞா

பக்கம் 02

# ஞானசாரரைக் கைது செய்யுமாறு சனியன்று யாழில் ஆர்ப்பாட்டம்

## ரெலோவின் ஏற்பாட்டில் நடைபெறும்

(எஸ்.நிதர்ஷன்)

முல்லைத்தீவு நீதிமன்றத்தின் கட்டளையை அவமதித்து சட்டத்தைக் கையில் எடுத்த ஞானசாரதேரரும் அவர் தலைமையிலான இனவெறிக் கும்பலின் உறுப்பினர்களும் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் நிறுத்தப்படவேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் யாழ் மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் யாழ் மத்திய பஸ் நிலையம் முன்பாக நடைபெறவுள்ள போராட்டத்தில் பேதங்களின்றி அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு நீராவிடியடிப் பிரச்சினையில் நீதி கோரி முன்னெடுக்கப்படும் இந்த ஆர்ப்பாட்டப் பேரணி எந்த வித கட்சி அரசியலையும் கலக்காமல் ஒன்றுபட்ட தமிழினத்தின் உணர்வலைகளை இலங்கை அரசுக்கு உணர்த்தும் வகையில் பொதுமக்கள் ஆர்ப்பாட்டமாக முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் இணைந்து நீதிகோரும் குரல்கள் பேரலையாக எழுவதை உறுதிப்படுத்த முன்வருமாறு யாழ். மாவட்டத்தில் செயற்படும் சகல சமய, சமூக, பொது அமைப்புக்களையும், தொழிற் சங்கங்கள், வர்த்தக சங்கங்கள் மற்றும் யாழ்.பல்கலைக்கழக சமூகம் உட்பட அனைத்து தரப்பினருக்கும் அழைப்பு விடுப்பதாகக் கட்சியின் மாவட்டக் கிளைச் செயலாளர் தெரிவித்துள்ளர். (ஐ-07)

# வாள்வெட்டுக் குழுவின் தாக்குதலுக்கு இலக்காகிய வர்த்தகர் பரிதாபச் சாவு!

வாள்வெட்டுக் கும்பலின் தாக்குதலுக்கு உள்ளான இரும்பக உரிமையாளர் 3 வாரங்களின் பின்னர் சிகிச்சை பயனின்றி நேற்று இரவு உயிரிழந்தார்.

எனினும் சம்பவம் இடம்பெற்று 3 வாரங்களுக்கு மேலாகியும் கோப்பாய் பொலிஸார் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று உயிரிழந்தவரின் உறவினர்கள் தெரிவித்தனர்.

கோண்டாவில் உப்புமடச் சந்தியில் அமைந்துள்ள லக்சுமி இரும்பகத்தின் உரிமையாளர் கந்தையா கேதீஸ்வரன் (வயது -47) என்பவரே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் செம்ரெம்பர் 6ஆம் திகதி மாலை 4 மணியளவில் இடம்பெற்றது.

அன்று மாலை இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த கும்பல் ஒன்று இரும்பகத்துக்குள் புகுந்து அதன் உரிமையாளரை கண்மூடித்தனமாகத் தாக்கியதுடன், இரும்பகத்துக்குள் அட்டூழியத்தில் ஈடுபட்டுவிட்டுத் தப்பித்தது.

இரும்பகத்தில் இருந்த கட்டை ஒன்றை எடுத்து உரிமையாளரின் தலையில் கும்பல் தாக்கியிருந்தது. அதனால் தலையில் படுகாயமடைந்த அவர், நேற்றுவரை யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார்.

இந்த நிலையில் 24 நாள்களின் பின்னர் நேற்று இரவு 9.30 மணியளவில் அவர் உயிரிழந்தார் என்று உறவினர்கள் தெரிவித்தனர்.

சம்பவ தினத்தன்று கோப்பாய் பொலிஸார் இரும்பகத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர். எனினும் உரிமையாளரைத் தாக்கல் கும்பல் பயன்படுத்திய மரக்கட்டையை சான்றுப்பொருளாக எடுத்துச் செல்ல பொலிஸார் மறுப்புத் தெரிவித்திருந்தனர்.

எனினும் உரிமையாளர் உயிரிழந்தவுடன் தற்போது உறவினர்களிடம் வாக்குமூலம் பெற்றுக்கொள்வதற்கு தற்போது (இரவு 10.30 மணி) கோப்பாய் பொலிஸார் முயற்சிகளை முன்னெடுத்துள்ளனர் என்று உயிரிழந்தவரின் உறவினர்கள் நேற்றிரவு தெரிவித்தனர். (ஐ-07)

# சு.கவின் முடிவு 5ஆம் திகதிக்கு

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக ஒரு முடிவை எட்டுவதற்காக நேற்றுக் கூடிய சு.கவின் மத்திய குழுக்கூட்டம் முடிவேதும் எட்டப்படாமல் முடிந்தது. மீண்டும் 5ஆம் திகதி கூடி ஆராய அக்கட்சி முடிவு செய்துள்ளது.

## ஐ.தே.கட்சியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பனத்தின் ஊடாக, ஒளிவு மறைவில்லாது நாட்டு மக்கள் மத்தியில் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்.

– இவ்வாறு பிரதமர் ரணில் மற்றும் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுடனான நேற்றைய சந்திப்பின் போது தெரிவித்தாராம் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன்.

தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு ஐக்கிய தேசிய கட்சி முன்வைக்கும் தீர்வு என்ன என்பதை பொறுத்தே ஐக்கிய தேசிய கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதா, இல்லையா என்ற தீர்மானத்தைக் கூட்டமைப்பு எடுக்கும் எனவும் அவர் கூறியுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் விசேட அழைப்பை அடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் மற்றும் ஊடகப் பேச்சாளர் எம்.எ.சுமந்திரன் ஆகியோர் நேற்றுப் பிற்பகல் 3 மணிக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அலரிமாளிகையில் சந்தித்தனர்.

இதன்போதே சம்பந்தன் மேற்கண்ட விடயங்களைத் தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஐக்கிய தேசிய கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ, அமைச்சர்களான மலிக் சமரவிக்கிரம, ரவி கருணாநாயக்க ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர்கள் வேறு எவரும் இந்தச் சந்திப்பில் கலந்து கொள்ளவில்லை.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராடிப் பெற்ற ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் நியமனம் கடைசி நேரத்தில் இப்படி கையை விட்டு நழுவிப் போனால் அதை விடப் பெரும் பரிதாபம் எதுவாக இருக்க முடியும்?

இரட்டைப் பிரஜாவுரிமை பெற்றிருந்தவர் கோட்டாபய. ஒன்று அமெரிக்கப் பிரஜாவுரிமை. மற்றையது இலங்கைக் குடியுரிமை.

இதில் அமெரிக்கப் பிரஜாவுரிமையை உத்தியோகபூர்வமாக அவர் துறந்தால்தான் இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் அவர் போட்டியிட முடியும்.

அமெரிக்கப் பிரஜாவுரிமையை அவர் துறப்பதில்தான் அவருக்குச் சிக்கல் இருக்கும் எனப் பலரும் கருதினர். நாங்களும் அப்படித்தான் எண்ணியிருந்தோம்; எழுதினோம்.

அந்தத் தடையை அவர் வெற்றிகரமாகத் தாண்டிவிட்டார் என்பதே இப்போது நிலைமை.

ஆனால், பூதம் வேறு ஒரு திசையில் இருந்து கிளம்பியிருக்கின்றது.

அவரது இலங்கைப் பிரஜாவுரிமையே இப்போது நீதிமன்றச் சிக்கலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றது.

இந்த மிலேனியத்தின் ஆரம்பத்தில் இலங்கைப் பிரஜாவுரிமையைத் துறந்து அமெரிக்க குடியுரிமையைப் பெற்றார் அங்கு வசித்து வந்த கோட்டாபய.

2005 நவம்பர் ஜனாதிபதித் தேர்தலை ஒட்டி, தமது தமையனார் மஹிந்த ராஜபக்ஷவுக்கு உறுதுணையாக இருக்க அமெரிக்கப் பிரஜையாக இலங்கை மீண்டார் அவர்.

ஜனாதிபதித் தேர்தல் 2005 நவம்பர் 17 ஆம் திகதி நடைபெற்றது. மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றி நவம்பர் 18ஆம் திகதி அறிவிக்கப்பட்டது. அவர் நவம்பர் 19ஆம் திகதி பதவியேற்றார்.

அச்சமயம், தனித்து அமெரிக்கப் பிரஜையாக இருந்த கோட்டாபயவுக்கு நவம்பர் 21 ஆம் திகதி இரட்டைப் பிரஜாவுரிமை முறைமையின் கீழ் இரண்டாவது குடியுரிமை இலங்கையினால் வழங்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. அப்படி குறிப்பிடும் சான்றிதழை கோட்டாபய வைத்திருக்கின்றார். அதில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒப்பமிட்டிருக்கின்றார். செயலாளர் என்ற பெயரில் விவரம் தெரியாத ஒருவரின் ஒப்பம் உள்ளது.

ஆனால் இது தொடர்பான பதிவுகளோ, ஆவணங்களோ பாதுகாப்பு அமைச்சிலோ, குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்திலோ, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சிலோ இல்லையாம்.

அவருக்கு வழங்கப்பட்ட இரண்டாவது பிரஜாவுரிமைக்கான சான்றிதழின் தொடர் இலக்கம் வழக்கமாக அச்சமயம் வழங்கப்பட்ட சான்றிதழ்களின் தொடர் இலக்க வரிசையைச் சேர்ந்ததல்ல என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தக் குடியுரிமைச் சான்றிதழ் செல்லுபடியற்றது, அவருக்கு வழங்கப்பட்ட இரண்டாவது குடியுரிமை சட்டரீதியானது அல்ல என்பதுதான் இப்போது வழக்குப் போட்டுள்ள தரப்புகளின் வாதம்.

குடியுரிமைச் சான்றிதழில் ஒப்பமிட வேண்டிய பாதுகாப்புச் செயலாளரின் இடத்தில் தமக்குள்ள அதிகாரத்தைப் பிரயோகித்து ஜனாதிபதியே ஒப்பமிட்டிருக்கின்றார் என்று கூறப்படுவதாக வழக்கின் மனுதாரர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஒரு ஜனாதிபதி பதவி துறந்து, புதிய ஜனாதிபதி பதவியேற்கும் போது அதுவரை இருந்த அமைச்சரவை செயலிழக்கின்றது. அமைச்சரவை செயலிழக்கும்போது அமைச்சின் செயலாளர்களும் பதவி இழக்கின்றனர். புதிய அமைச்சரவையும், அந்த அமைச்சுக்கான செயலாளர்களும் வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டே பதவி ஏற்பர்.

இப்படி அமைச்சரவையும் நியமிக்கப்படாமல், செயலாளர்களும் சட்டரீதியாக இல்லாத காலத்தில், இந்த இரட்டைப் பிரஜாவுரிமைக்கான சான்றிதழ் வழங்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுவது முற்றிலும் சட்ட ரீதியாக முறையற்றது என்பது வழக்குத் தொடுநர்களின் வாதம்.

மேலும், தமது பழைய அடையாள அட்டைப் பதிவுகளை எல்லாம் மறைத்து விட்டுப் புதிய விண்ணப்பம் ஒன்றைக் குறிப்பிட்டு புதிய அடையாள அட்டை ஒன்றையும் –

அந்தப் புதிய அடையாள அட்டை மூலம், பழைய விடயங்களை மறைத்து புதிய கடவுச்சீட்டு ஒன்றையும் –

கோட்டாபய பெற்றுக் கொண்டிருக்கின்றார் என்றும் வழக்குத் தொடுநர்கள் நீதிமன்றுக்கு சமர்ப்பித்துள்ள மனுவில் தெரிவித்துள்ளனர். அது குறித்து அவர்கள் மேற்கொண்ட பொலிஸ் முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸாரும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இவற்றில் பலவற்றில் ஆழமான சட்ட நியாயங்கள் இருக்கின்றன என்றே தெரிகின்றது.

இவ்விடயங்கள் குறித்து இப்பத்தியில் ஏற்கனவே சில விவரங்களை – உண்மைகளை – நான் கோடி காட்டியிருக்கிறேன்.

கோட்டாபயவின் இலங்கைப் பிரஜாவுரிமைச் சான்றிதழ் விடயத்தில் தில்லு முல்லுகள் இருக்கின்றமையை இரண்டு மாதங்களுக்கு முன்னரும் இப்பத்தியில் சில விவரங்களுடன் பிரஸ்தாபித்திருந்தேன்.

எது, எப்படி என்றாலும், இவ்விடயத்தில் நீதிமன்றின் தீர்மானம் – இடைக்காலத் தடை உத்தரவுக் கோரிக்கை தொடர்பான மன்றின் உத்தரவு – வெள்ளியன்று வந்து விடும்.

கோட்டாபயவுக்கு சார்பாக அது வருமானால் அவருக்கு நல்லது. அவர் தேர்தலில் போட்டியிடலாம். வென்றால் நாட்டின் ஜனாதிபதியுமாகலாம்.

நீதிமன்ற உத்தரவு மாறி வந்துவிட்டால்...? அவரின் இலங்கைப் பிரஜாவுரிமைச் சான்றிதழின் சட்டச் செல்லுபடித் தன்மைக்கு எதிராக நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு விதித்துவிட்டால், நிலைமை என்ன?

கோட்டாபயவின் நிலைமை திரிசங்கு சொர்க்கம்தான்.

நீதிமன்றத் தீர்ப்பு அப்படி அமைந்தால் அவருக்கு இலங்கைப் பிரஜாவுரிமை இல்லை என்றாகிவிடும். அமெரிக்க குடியுரிமையையும் அவர் ஏற்கனவே உத்தியோக பூர்வமாகத் துறந்துவிட்டார் என்பது நேற்று அவர் தரப்பில் வெளியிடப்பட்ட ஆவணம் மூலம் உறுதியாகிவிட்டது.

அப்படியானால், அத்தகைய நிலையில் கோட்டாபய நாடற்ற பிரஜை.

நாடற்ற பிரஜை இலங்கையில் உரிய கடவுச் சீட்டு, விசா இல்லாமல் இருந்தால் இருக்க வேண்டிய இடம் இதற்கான தடுப்பு முகாம்தான்.

ஜனாதிபதி வேட்பாளராகக் களத்தில் நின்று ஜனாதாபதியாகும் கனவில் இருப்பவரை தடுப்புமுகாமில் கொண்டு போய் நிறுத்துவது சரியா...?

நீதிமன்றத் தீர்ப்பு கோட்டாவுக்கு எதிராகத் திரும்புமானால், அதற்குப் பின்னர் அவரின் போராட்டம் தேர்தல் சமராக இருக்காது.

'பிச்சை வேண்டாம், நாயைப் பிடி!' என்ற மாதிரி தேர்தலும் வேண்டாம், அரசியலும் வேண்டாம், பிரஜாவுரிமையை மட்டும் தந்தால் போதும் என்ற போராட்டமாகத்தான் அது இருக்கும்...!

- மின்னல் -

## மஹிந்தவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிய, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு இரகசிய ஆலோசனை வழங்கியுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

கோட்டாபயவுக்கு எதிரான பிரஜாவுரிமைப் பிரச்சினை தொடர்பான மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நாளை புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. இந்த மனு மீது சிலவேளை இடைக்காலத் தடையுத்தரவு வழங்கப்பட்டால் கோட்டாபய ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாத நிலைமை ஏற்படும். அதற்காக முற்கூட்டியே மாற்று ஏற்பாடு செய்து வைத்திருப்பது நல்லதென மஹிந்தவுக்குத் தேசப்பிரிய ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதையடுத்து மாற்று வேட்பாளர் ஒருவரைத் தேர்ந்தெடுப்பதில் ராஜபக்ஷ அணியினர் அதிக கவனம் செலுத்தியுள்ளனர்.

பெரும்பாலும் மஹிந்தவின் மனைவி ஷிரந்தி ராஜபக்ஷ அல்லது மஹிந்தவின் சகோதரர் சமல் ராஜபக்ஷ அல்லது வேறு ஒருவர் மாற்று வேட்பாளராகத் தெரிவாகலாம் எனவும் அறிய முடிந்தது.

இதேவேளை, மஹிந்தவின் மற்றொரு சகோதரரான பஸில் ராஜபக்ஷ சத்தம் சந்தடியின்றி தனது அமெரிக்கக் குடியுரிமையை இரத்துச் செய்துகொண்டுள்ளார் எனவும் ஒரு தகவல் தெரிவித்தது. ஜனாதிபதி வேட்பாளராகக் கோட்டாபய போட்டியிட முடியாத நிலைமை ஏற்பட்டால் தான் வேட்பாளராகக் களமிறங்கும் நோக்குடன் அமெரிக்கக் குடியுரிமையை பஸில் இரத்துச் செய்திருக்கலாம் எனவும் அந்தத் தகவல் மேலும் தெரிவித்தது.

எனினும், கோட்டாபய ராஜபக்ஷவை இலங்கைப் பிரஜையாக ஏற்றுக்கொள்வதைத் தடுக்குமாறு கோரி முன்வைக்கப்பட்ட மனு மீது நாளை இடம்பெறும் விசாரணையையடுத்து வழங்கப்படும் தீர்ப்பைப் பொறுத்தே அவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியுமா? முடியாதா? என்பது தொடர்பில் தெரியவரும். (ஐ)

## சுதந்திரக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜயசேகர தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலர் அகிலவிராஜ் காரியவசம் ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திரக் கட்சியின் ஆதரவைக் கோரினார் என்று சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

'ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் எழுத்துமூலம் சுதந்திரக் கட்சியின் ஆதரவைக் கோரியுள்ளார். ஜனாதிபதிவேட்பாளரான அமைச்சர் சஜித் பிரேமதாஸவும் சு.க – ஐ.தே.க கூட்டணி தொடர்பில் கரிசனை கொண்டுள்ளார்' என்று தயாசிறி மேலும் குறிப்பிட்டார்.

சுதந்திரக் கட்சியும் பெரமுனவும் கூட்டணி குறித்த பேச்சில் ஈடுபட்ட நிலையில் பொதுச் சின்னத்தை வலியுறுத் திச் சுதந்திரக் கட்சி கூட்டணியில் இருந்து பின்னடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கோட்டா ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கின்றன. ஆனால் அவர் வந்தால் சர்வதேச ரீதியாக எமக்கு நன்மையே அல்லாது தீமையில்லை.

– இவ்வாறு தெரிவித்திருக்கிறார் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்.

ஊடகவியலாளர் கேள்வி ஒன்றுக்கான பதில் என அவர் அனுப்பிவைத்த அறிக்கையிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு: –

கேள்வி:– உங்கள் கருத்துப்படி ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கின்றீர்கள்?

பதில்:– இம்முறை ஜனாதிபதித் தேர்தல் மிக முக்கியமானது. ஜனாதிபதி யார் என்ற அடிப்படையில்தான் பின்னர் நாடாளுமன்ற தேர்தல்களும் மாகாண சபைத் தேர்தல்களும் நடப்பன.

ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளருக்கே தமிழர்கள் வாக்களிப்பார்கள் என்றதொரு பொதுக் கருத்துண்டு. அதற்குக் காரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுகாறும் ஐ.தே.கட்சிக்கு ஆதரவு அளித்து வந்தமையே.

எப்படியுந் தமக்கே தமிழர்கள் வாக்களிப்பார்கள் என்ற எண்ணத்தில் சஜித் இருந்தால் அவர் தன்னைத் தானே ஏமாற்றுபவர் ஆகிவிடுவார்.

கோட்டாபயவைப் பொறுத்தவரை பெரும்பான்மைச் சிங்கள வாக்குகளை அவரே பெறுவார். தமிழர்கள் எவருக்கும் வாக்களிக்காமல்விட்டால் கட்டாயம் கோட்டாபயவே வெல்வார். கோட்டாபயவுக்கு எந்தத் தன்மானத் தமிழனும் வாக்களிக்க மாட்டார் என்று நான் முன்னர் கூறியுள்ளேன்.

சஜித் எந்தவித நன்மையைப் பெற்றுத் தருவேன் என்று தமிழர்களுக்குக் கூறாதுவிட்டு தமிழர்கள் எவருக்கும் வாக்களியாது விட்டால் அது கோட்டாபயவுக்கே நன்மையாகப் போய்விடும். கோட்டாபய தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியாக என்ன செய்யப் போகின்றார் என்று எதுவுங் கூறத்தேவையில்லை. ஆனால் சஜித் எமக்கு என்ன தரப் போகின்றார் என்று கூறாதுவிட்டு தமிழர்கள் அவருக்கு வாக்களிக்காது விட்டால் கட்டாயம் கோட்டாபய வெல்வார்.

கோட்டாபய வென்றால் தமிழர்கள் மீண்டும் பழைய நிலைக்குப் போய் விடுவார்கள் என்று தமிழர்கள் அஞ்சுவது புரிகின்றது. அவ்வாறு அவர் நடந்து கொள்ளமாட்டார் என்றே தோன்றுகின்றது. அந்த அளவுக்கு உலக நாடுகள் அவரை உற்று நோக்கிக் கொண்டு இருக்கின்றன. ஆனால் அவர் வந்தால் சர்வதேச ரீதியாக எமக்கு நன்மையே அல்லாது தீமையில்லை.

தற்போதிருக்கும் நிலையில் அவர் சீனாவைச் சார்ந்தே செல்ல வேண்டிய நிலையில் உள்ளார். இதை இந்தியாவும் அமெரிக்காவும் விரும்பமாட்டார்கள். அதனால் இந்தியாவும் அமெரிக்காவும் தமிழ் மக்கள் சார்பாக நடவடிக்கைகளை எடுக்கவேண்டியதொரு நிலைக்குத் தள்ளப்படுவார்கள். அது எமக்கு நன்மைதரும்.

அமெரிக்காவுடன் கள்ள உறவு கோட்டாபயவுக்கு இருப்பதாகக் கூறப்படுகிறது. அப்படி இருந்தாலும் கூட அமெரிக்கா கோட்டாபயவை வழி நடத்தவே பார்க்கும். அது தமிழர்களுக்கு சார்பாகவே இருக்கும். ஏனென்றால் எமது புலம்பெயர் தமிழரின் செல்வாக்கு அமெரிக்காவில் இருப்பது கண்கூடு.

ஆகவே சஜித் எமக்குத் தரப்போவதை அவர் தெளிவாக, வெளிப்படையாகக் கூறவேண்டும். அதனால் அவருக்கு வரப்போகும் சிங்கள வாக்குகள் குறைந்துவிடமாட்டா. ஆனால் தமிழ், முஸ்லிம் வாக்குகள் அவரை வெல்ல வைக்கும். தமிழ் மக்களின் பாரம்பரிய வதிவிடங்களை ஏற்கனவே பல ஆவணங்களில் இலங்கை ஏற்றுக் கொண்டுள்ளது.

ஆகவே பாரம்பரிய தமிழ் பேசும் பிரதேசங்கள் எவை என்பதை சஜித் ஏற்க வேண்டும். அப்படியானால் அவர்களுக்கு வழங்கப்போகுந் தீர்வை அவர் வெளிப்படையாகக் கூறவேண்டும்.

வேண்டுமெனில் புத்தரின் போதனைகளே தம்மை வழி நடத்துவதாகக் கூறி எமக்கு அவர் தரப்போவனவற்றைக் கூறிவைக்கலாம். எம்மைப் பொறுத்த வரையில் அவர் தருவதை ஏற்கும் நிலையில் நாம் இல்லை. எம்மிடம் இருந்து பறிக்கப்பட்ட உரித்துக்கள் பற்றியும் அவற்றை எவ்வாறு திருப்பித்தர வேண்டும் என்பது சம்பந்தமாகவும் எமது முன்மொழிவுகளை இந்த அரசுக்கு ஏற்கனவே சொல்லியாகிவிட்டது.

எமது மாகாண சபையும் அது பற்றித் தனது முன்மொழிவுகளைத் தெரியப்படுத்தியுள்ளது.

ஆகவே சஜித் எதைத் தருவார் என்று முதலில் அவரின் தேர்தல் அறிக்கையைப் பரிசீலித்துப் பார்ப்போம். அதன்பின் அவரின் நிலைப்பாட்டைக் கேட்டறிவோம்.

பின்னர் நடவடிக்கையில் இறங்குவோம். இப்போது பொறுமை காப்போம் – என்றுள்ளது. (ஐ)

## நீதிமன்றின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரிசீலித்து வெள்ளிக்கிழமையன்று அது பற்றிய முடிவை வெளியிடுவதாக அறிவித்திருக்கின்றமை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தரப்பில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருப்பதாக கொழும்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தப்பித்தவறி இடைக்கால உத்தரவு அக்கட்சிக்குப் பாதகமாக வரும்எனின், அதற்குஎதிராக உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்வதற்குக் கூட கால அவகாசம் இருக்காது எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இடைக்காலத்தடைக்கோரிக்கை தொடர்பாகத் தனது உத்தரவை எதிர்வரும் வெள்ளிக்கிழமையன்று (4 ஆம் திகதியன்று) வழங்குவதாக மேன்முறையீட்டு நீதிமன்றம் தெரிவித்துள்ளது. 5,6 ஆம் திகதிகள் சனி, ஞாயிறு விடுமுறை நாள்கள். திங்கட்கிழமையன்று வேட்புமனு ஏற்கும் நாள்.

கோட்டாபயவின் இலங்கைக் குடியுரிமையை இடைநிறுத்தக் கோரும் வேண்டுகோளை ஏற்று அதற்கான இடைக்கால உத்தரவை வெள்ளியன்று மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிவிட்டால், அதற்கு எதிராக மேன்முறையீடு செய்து நிவாரணம் பெற அவருக்குக் கால அவகாசம் இருக்காது, அவரால் இத்தேர்தலில் வேட்புமனுத் தாக்கல் செய்ய முடியாமல் போய் விடும் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்த நெருக்கடிச் சூழலிலேயே பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தர்கள் நேற்று மாலையும், நேற்றிரவும் கூடி நிலைமையின் விபரீதத்தை ஆராய்ந்தனர் என்றும், நீதிமன்றத் தீர்ப்புப் பாதகமானால் அதை எதிர் கொள்ளும் வகையில் மாற்று வேட்பாளர் குறித்து அவர்கள் ஆராய்ந்தனர் என்றும் அறிய வந்தது.

## வேட்பாளராகும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேன்முறையீட்டு நீதிமன்றம் வெள்ளியன்று வழங்கும் முடிவில் கோட்டாபய ராஜபக்ஷவின் அரசியல் எதிர்காலம் பற்றிய தலைவிதி தீர்மானிக்கப்படும் எனக் கூறப்படுகின்றது.

கோட்டாபய ராஜபக்ஷ இதுவரை காலமும் தாம் பேணிய இரட்டைப் பிரஜாவுரிமையில் அமெரிக்கக் குடியுரிமையைத் துறந்தாரா, அதற்கான சான்றிதழை அமெரிக்கா அவருக்கு வழங்கியதா என்ற சர்ச்சையே நீடித்து வந்தது.

ஆனால் இப்போது புதிய பிரச்சினை எழுந்துள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷ இரட்டைப் பிரஜாவுரிமையை 2005 இல் மீளப் பெற்றுக் கொண்டமை –

இந்த ஆண்டில் அவர் இலங்கையில் புதிய அடையாள அட்டை ஒன்றைத் தவறான வழிமுறையில் பெற்றுக் கொண்டமை –

அதனைப் பயன்படுத்தி இலங்கை கடவுச் சீட்டைப் புதிதாகப் பெற்றமை –

ஆகிய மூன்று விடயங்களை முன்னிறுத்தி காமினி வியாங்கொட, பேராசிரியர் சந்திரகுப்த தேநுவர ஆகிய இருவர் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவே இப்போது அவருக்குப் பெரும் நெருக்கடியாக வந்திருக்கின்றது.

நேற்று இந்த வழக்கு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அதன் தலைவர் யஸந்த கோட்டாகொட, நீதியரசர் அர்ஜுன ஒபயசேகரா ஆகியோர் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது, வழக்கை விசாரணைக்கு ஏற்று நீதிமன்றம் அறிவித்தல் விடுத்தமை கோட்டாபய ராஜபக்ஷவுக்குப் பெரும் பின்னடைவு என்று கூறப்படுகின்றது.

இலங்கைப் பிரஜையாக இல்லாத ஒருவர் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதால் இலங்கையின் பிரஜைகளுக்குப் பேராபத்து ஏற்படுவதுடன், அது இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாடு, இறைமை, தேசிய பாதுகாப்பு ஆகியவற்றுக்கும் அச்சுறுத்தலாகும் என்று சுட்டிக்காட்டியுள்ள மனுதாரர், அதனால் கோட்டாபய ராஜபக்ஷவின் இரட்டைப் பிரஜாவுரிமைச் சான்றிதழ் தொடர்பில் நிரந்தரத் தீர்ப்பு வழங்க முன்னர், அதனை இடைநிறுத்தி ஓர் இடைக்கால உத்தரவு வழங்கும்படியும் மனுவில் கோரியிருந்தனர்.

இந்த மனுவை விசாரணைக்கு ஏற்பதற்குத் தீர்மானித்த நீதிமன்றம், இந்த இடைக்கால உத்தரவு தொடர்பான கோரிக்கை குறித்து நாளையும், மறுதினமும் (2, 3 ஆம் திகதிகளில்) விசாரணை நடத்தி அடுத்தநாள் வெள்ளியன்று முடிவை அறிவிக்கத் தீர்மானித்தது.

மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் நீதியரசர் யஸந்த கோட்டாகொட, நீதியரசர் அர்ஜுன ஒபயசேகரா, நீதியரசர் மஹிந்த சமயவர்த்தன ஆகியோரைக் கொண்ட ஆயம் இந்த மனுவை விசாரணை செய்யும் என்றும் அறிவிக்கப்பட்டது. (உ)

## நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்தனவும், நவ சிஹல உறுமய கட்சி சார்பில் சரத் மனமேந்திராவும் ஜாதிக சங்வர்தன பெரமுன சார்பில் ரொஹான் பல்லேவத்தவும் இவ்வாறு நேற்றுக் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

இந்தவகையில், இதுவரை அங்கீகரிக்கப்பட்ட ஒன்பது அரசியல் கட்சிகள் சார்பிலும், நான்கு சுயேச்சைகள் சார்பிலும் இவ்வாறு கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது.

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனையிறவில் மீண்டும் இராணுவச் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு தனியார் வாகனங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.

அதேவேளை, கண்டி நெடுஞ்சாலையில், நாவற்குழிப் பாலத்திலும் இராணுவச் சோதனைச் சாவடி அமைக்கப்பட்டுள்ளபோதிலும் அதில் சந்தேகத்துக்கு இடமான வாகனங்கள் மறிக்கப்பட்டு சோதனைகள் மேற்கொள்ளப்படுவதுடன் வாகன இலக்கங்களையும் பதிவு செய்கின்றனர்.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதல்களை அடுத்து யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் இராணுவ, பொலிஸ் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கடந்த மாதம் முதல் இந்தச் சோதனை சாவடிகள் அகற்றப்பட்டன. இந்த நிலையில் மீண்டும் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு யாழ். குடா நாட்டின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ். நீதிவான் நீதிமன்றில் நடைபெற்று வரும் லலித் – குகன் காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவை மன்றில் முன்னிலையாகி சாட்சியம் அளிக்குமாறு மன்று அழைப்பாணை விடுத்திருந்தது. யாழ்ப்பாணம் செல்வது பாதுகாப்பு இல்லை என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் சென்று கோட்டாபய கட்டளை பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## எந்த ஜனாதிபதியும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நீதிமன்றத்தின் கட்டளைக்குச் சம்பந்தப்பட்ட பௌத்த மதகுருக்கள் கட்டுப்படவில்லை. நீதிமன்றத்தின் கட்டளையை நடைமுறைப்படுத்தவேண்டிய பொலிஸார் சம்பவத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். நீதிமன்றத்தின் கட்டளை வருவதற்கு முன்பாக வடபிராந்திய பொலிஸ்மா அதிபருடன் தொடர்பு கொண்டு இந்த விடயம் தொடர்பாகக் கதைத்தேன். ஞானசார தேரர் தன்னிச்சையாக ஒரு இடத்தில் தகனம் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார். ஆனால் நீதிமன்ற கட்டளை வருவதற்கு முன்னர் இவ்வாறு செய்வதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று என் ஆதங்கத்தை வடபிராந்திய பொலிஸ்மா அதிபரிடம் தெரிவித்திருந்தேன். எனினும் பொலிஸார் பௌத்த மதகுருக்களுக்கு ஆதரவாகச் செயல்பட்டுள்ளனர்.

இந்த இரண்டு விடயங்களிலும் நாட்டில் பௌத்த மதகுருக்களை அல்லது சிங்கள பௌத்த பேரினவாதத்தைக் கட்டுப்படுத்த நீதிமன்றங்களினால் முடியாது என்கின்ற செய்தி வெளிப்படையாக புலப்படுகின்றது. பௌத்த பேரினவாதத்திற்கு எதிராகப் பொலிஸ் திணைக்களம் அல்லது எந்தவிதமான திணைக்களமும் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்க முடியாது என்கின்ற சூழ்நிலை வெளிப்படையாகத் தெரிகின்றது. நாங்கள் ஒரு விடயத்தை கருத்தில் எடுக்க வேண்டியுள்ளது.

வடக்கு – கிழக்கில் அல்லது இங்கிருக்கின்ற தமிழ் மக்களாக இருக்கலாம் அல்லது தமிழ் பேசுகின்ற மக்களாக இருக்கலாம். சிங்களப் பேரினவாதிகள் அவர்களின் கொள்கைக்கு இணங்கிப் போனால் மாத்திரமே இலங்கையில் இருக்க முடியும் என்ற ஒரு கருத்தை இந்தச் செயற்பாட்டின் மூலம் வெளிப்படையாகச் சொல்கின்றார்கள்.

எந்த அரசாக இருந்தாலும் பௌத்த சிந்தனையை மீறித் தமிழ் மக்களின் கோரிக்கையினை நிறைவேற்றுவதற்குத் தயார் இல்லை. நீராவியடிப் பிள்ளையார் ஆலயம் தொடர்பான நீதிமன்றத்தின் கட்டளையைப் பொலிஸார் நடைமுறைப்படுத்தி இருக்க வேண்டும் – என்றார். (ஐ)

## கிழக்கிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளதுடன், சாய்ந்தமருதுப் பகுதியில் இராணுவத்தினரின் குழு ஒன்று தேடுதல் நடவடிக்கை ஒன்றை முன்னெடுத்தது.

நேற்றுத் திங்கட்கிழமை மாலை திடீரென உழவு இயந்திரத்தில் வந்த சுமார் 15 க்கும் அதிகமான இராணுவத்தினர் நாவிதன்வெளி பிரதேச செயலகத்துக்கு அருகே உள்ள சவளக்கடைச் சந்தியில் நிரந்தர சோதனைச் சாவடி ஒன்றை அமைத்துச் சோதனை நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம், ஆனையிறவு உள்ளிட்ட பகுதிகளில் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளமையுடன் சில இடங்களில் இராணுவத்தினர் சோதனை நடவடிக்கைகளை நேற்று முன்னெடுத்தனர்.

அதேபோன்று இராணுவத்தினருக்கு நேற்று கிடைக்கப் பெற்ற தகவல் ஒன்றை அடுத்து கனரக வாகனம் ஒன்றில் சுமார் 40க்கும் அதிகமான இராணுவத்தினர் சாய்ந்தமருதுப் பகுதியில் தேடுதலில் ஈடுபட்டனர்.

சாய்ந்தமருது அல் ஹிலால் வீதியில் அமைந்துள்ள வீடுகள், மையவாடியை அண்டிய பகுதிகளில் தேடுதலை மேற்கொண்டமையுடன் குறிப்பிட்ட பிரதேசத்தில் வீதியால் சென்ற பொதுமக்களும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

அண்மைக்காலமாக அடிக்கடி இடம்பெறும் இராணுவச் சோதனை நடவடிக்கைகளால் மக்கள் அச்சத்துடன் காணப்படுகின்றனர்.

மேலும் இந்தப் பகுதிகளில் கடந்த ஒரு வாரமாக இராணுவத்தினரால் தொடர் தேடுதல்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கோட்டா தொடர்பான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றம் சம்பந்தப்பட்ட அரச அலுவலகங்களுக்கு நேற்று உத்தரவிட்டது.

கோட்டாவின் இலங்கைப் பிரஜாவுரிமைச் சான்றிதழ் செல்லுபடியற்றது என உத்தரவிடக்கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குத் தொடர்பாகவே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், குடிவரவு, குடியகல்வுத் திணைக்களக் கட்டுப்பாட்டாளர், ஆள்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம், உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் வஜிர அபேகுணவர்த்தன ஆகிய தரப்புகளுக்கே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷவுக்கு 2005 நவம்பரில் இரண்டாவது பிரஜாவுரிமையாக இலங்கைக் குடியுரிமை வழங்கப்பட்டமை தொடர்பில் பாதுகாப்பு அமைச்சிலோ, குடிவரவுத் திணைக்களத்திலோ எந்த வித ஆவணங்களும் இல்லை என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் மனுதாரர்கள் நேற்று நீதிமன்றுக்கு சுட்டிக்காட்டினர்.

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## மனித உரிமை மீறல் குற்றங்களில் பொறுப்பு மைத்திரிக்கும் உண்டு

முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் பௌத்த பிக்குவின் உடலை நீதிமன்ற உத்தரவை மீறித் தகனம் செய்தவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார் தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் எம்.பி.

இது தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குத் தாம் அனுப்பியுள்ள கடிதத்திலேயே அவர் இதனை வலியுறுத்தியிருக்கின்றார்.

அந்த வலியுறுத்தல் கடிதத்தில் அவர் சுட்டிக்காட்டியுள்ள ஒரு விடயம் முக்கியமாக நோக்கற்பாலது.

“அண்மைக் காலங்களில் குற்றவாளிகளுக்கு எதிராக சட்டம் நிலைநாட்டப்படாத விதிவிலக்குக் கலாசாரம் வலுப்பெற்று வருகின்றமையை நான் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

“மனிதாபிமானம் மற்றும் மனித உரிமைகளுக்கு எதிராக இழைக்கப்பட்ட பாரதூரமான குற்றங்களுக்கு எதிராக முறையான விசாரணைகளோ முறையான நடவடிக்கைகளோ எடுக்கப்படவில்லை.

“நீதிமன்றத்தை அவமதித்த நபருக்கு ஜனாதிபதியின் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.”

– என்றெல்லாம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எழுதிய கடிதத்தில் சுட்டிக்காட்டுகின்றார் சம்பந்தன் எம்.பி.

தமிழர்களுக்கு எதிராக யுத்த காலத்தில் புரியப்பட்ட யுத்தக் குற்றங்கள் குறித்து இதுவரையில் நீதி, நேர்மையான விசாரணை நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படவில்லை.

யுத்த காலத்தில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட – மனிதாபிமானம் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் போன்றவை தொடர்பில் – எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அப்போது நடைமுறைப்படுத்தப்பட்ட குற்றவிலக்களிப்பு சிறப்புரிமை இன்று வரைத் தொடருகின்றது.

அன்று யுத்தத்தின் பெயரால் படையினருக்கு வழங்கப்பட்ட அந்தச் சிறப்புரிமை, இன்று புத்தத்தின் பெயரால் காவியுடை பிக்குகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது.

அன்று – மஹிந்தரும் அவர் சகோதரர் கோட்டாவும் அதை – அந்தச் சிறப்புரிமையை – முன்னின்று வழங்கினர்.

இன்று – ஞானசார தேரருக்கு பொதுமன்னிப்பு வழங்கிய மைத்திரியார் – அந்தச் சிறப்புரிமையை காவியுடைகளுக்கு விசேடமாக வழங்கி நிற்கின்றார்.

எனினும், இதில் ஒரு வித்தியாசம் உண்டு. மஹிந்தரும், கோட்டாவும் தமிழர்களின் வாக்குகளில் – தெரிவில் – பதவிக்கு வந்தவர்கள் அல்லர்.

ஆனால், மைத்திரியார் தமிழ் மக்களின் – அதுவும் சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பின் வழிப்படுத்தலில் தமிழ் மக்களின் – ஆதரவைப் பெற்று ஆட்சி அதிகாரத்துக்கு வந்தவர்.

யுத்தத்தின் இறுதிக் காலத்தில் தமிழருக்கு எதிராகப் புரியப்பட்ட யுத்தக் குற்றங்கள் குறித்து நீதி விசாரணை நடைபெறாமல் தடுத்து, அக்குற்றங்களைப் புரிந்தோருக்கு சட்ட விலக்களிப்புச் சிறப்புரிமையை வழங்குவதில் ராஜபக்ஷாக்கள் காட்டும் தீவிரம் புரிந்து கொள்ளத்தக்கது.

ஆனால், தான் ஆட்சிக்கு வந்த பின்னர் தமது அரசு மூலம் ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் அத்தகைய விடயங்களுக்குப் பக்கச் சார்பற்ற நீதி விசாரணைக்கு இணக்கம் தெரிவித்து விட்டு வந்து, இப்போது அதற்கு இடமளியேன், நாட்டின் எந்தப் பாதுகாப்புப் படை வீரனுக்கு எதிராகவும் விசாரணைக்கு அனுமதிக்க மாட்டேன் என்றெல்லாம் மைத்திரியார் முழங்குவதுதான் – பிடிவாதம் பிடிப்பதுதான் – துரதிஷ்டமானது; வேதனைக்குரியது.

அந்தச் சட்ட விலக்களிப்பு சிறப்புரிமையை இப்போது பௌத்த தீவிரவாதப் போக்கு பிக்குகளுக்கும் விஸ்தரித்து நிற்கின்றார் மைத்திரியார்.

இத்தகைய நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்தை சர்வ சாதாரணமாக – அநாயசமாக – காவியுடை தரித்தோர் புரிவதற்குக் காரணமே, அதற்கான ஆதரவுரிமையை மைத்திரியார் வழங்கி நிற்பதே என்பது கண்கூடு.

அத்தகைய ஜனாதிபதி ஒருவரைத் தமிழர்கள் தாங்களே வாக்களித்து தெரிவு செய்தமைக்காக வேதனைப்பட வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

அத்தகைய ஒருவருக்கு வாக்களிக்குமாறு தமது மக்களை வழிப்படுத்தியமைக்காக தமிழர் தலைவர்கள் தமக்குத் தாமே வெட்கப்படவேண்டியவர்களாகவும் உள்ளனர்.

தாமும் சேர்ந்து அதிகாரத்துக்குக் கொண்டு வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இலங்கையில் மோசமான மனித உரிமை மீறல் செயற்பாடுகளுக்கு தாராளமாக இடமளித்தமை மூலம் மனித உரிமை மீறல் நபராக சர்வதேசத்தினால் அடையாளப்படுத்தப்பட வேண்டியவர் என்ற பிரசாரத்தை சர்வதேச மட்டத்தில் எதிர்காலத்தில் முன்னெடுக்க வேண்டிய கடப்பாடு இதன் மூலம் கூட்டமைப்பு மீது விழுந்துள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

# தமிழரை கிள்ளுக்கீரையாக எண்ணுகின்றார் ஞானசாரர்

## ரெலோ அமைப்பு கண்டனம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக். 01

இலங்கை ஆட்சியாளர்களதும் ஆட்சிக்கு வர நினைக்கின்றவர்களதும் முகவர்களாகச் செயற்படுகின்ற ஞானசார தேரர் போன்றவர்கள் தமிழர்களைக் கிள்ளுக்கீரையாக எண்ணுகின்றனர். சிங்கள பௌத்த மேலாதிக்க சிந்தனைகளைத் தமிழர் தாயகப் பகுதிகளில் அனுமதிக்காது தமிழர் தேசத்தைப் பாதுகாப்போம் என தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) இளைஞரணித் தலைவரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான சபா குகதாஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கைத் தீவு சிங்கள பௌத்த நாடு. இதனை ஏற்றுக் கொண்டவர்கள் இங்கு இருக்கலாம். ஏனையோர் வெளியேறலாம் என பொதுபலசேனாவின் செயலாளர் கலகொட ஞானசாரதேரர் குறிப்பிட்டுள்ள விடயம் புதியது அல்ல. ஏனெனில் இதற்கு முன்பும் பல தடவைகள் இதே போன்ற முரண்பாடான கருத்துக்களை கூறியுள்ளார்.

அத்துடன் சில பௌத்த பீடங்களின் தேரர்களும் தமிழர்களை மிரட்டும் வகையில் கருத்துக்களைக் கூறியுள்ளனர். இதன் பின்னணி வேறு யாருமில்லை ஆட்சியாளர்களும் ஆட்சிக்கு வரத் துடிப்பவர்களும் இவர்கள் போன்றோரை தமது தேவைக்கு ஏற்ப முகவர்களாக பயன்படுத்துகின்றனர்.

ஜனநாயகம் பேசும் ஆட்சியாளர் வடக்கு – கிழக்கு மாகாணங்களில் நீதி ஜனநாயகம் போன்றவற்றை ஒரு பொருட்டாக மதிப்பதில்லை. தங்களின் அரசியல் நலன்களுக்காக தமிழ் மக்களைக் கிள்ளுக்கீரையாக பாவிக்கலாம் என எண்ணுகின்றனர். அதற்காக நேரடியாக இனவாதத்தைக் கையில் எடுக்காது தமது முகவர்களாகச் சில பிக்குகளைப் பயன்படுத்துகின்றனர்.

மகாவம்சம் கூறுகின்ற வரலாற்றைக் கூடச் சரியாகப் படிக்கவில்லை. விஜயனும் 700 தோழர்களும் இலங்கையின் தம்பபன்னிக் கரையில் இறங்கும்போது இயக்கர், நாகர் என்கின்ற தமிழர்கள் வாழ்ந்தனர் எனவும், இளவரசி குவேனி ஆட்சித் தலைவியாக இருந்தாள் எனவும் மகாவம்ச ஆசிரியர் மகாநாம தேரோ குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு இலங்கையில் தமிழர்கள் வாழ்ந்தமைக்கான 3000 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாறு ஆதாரங்களால் நிறுவப்பட்டுள்ளது. இவ்வாறிருக்கையில் ஞானசார தேரர் வரலாற்றைத் திரிபுபடுத்த முனைகிறார்.

இவ்வாறு இனவாதம் பேசும் தேரர் முழு இலங்கைத்தீவின் இறைமையை சீனா.இந்தியா. அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு கூறுபோட்டு விற்கப்படுவதைத் தட்டிக் கேட்க முடியாமல் வடக்கு – கிழக்கைப் பூர்வீக தாயகமாகக் கொண்டு வாழும் தமிழர்களை குறிப்பாக சகோதர இனத்தை எடுத்தெறிவது மிகவும் அருவருப்பான செயல். நாகரிகம் வளர்ந்த உலகில் ஜனநாயகத்தை மதிக்கும் எந்த மனிதனும் இத்தகைய செயல்களை ஏற்றுக்கொள்ளமாட்டான்.

இலங்கைத்தீவில் இருக்கின்ற தமிழர் தேசத்தைப் பாதுகாப்பதற்கு ஒத்துழைப்பது ஒவ்வொரு தமிழனதும் வரலாற்றுக் கடமையாக இருக்கின்றது – என்றார். (ஐ)

# ஈஸ்டர் குண்டுத் தாக்குதலுக்கு கோட்டாவே முழுப் பொறுப்பு!

## அமைச்சர் சம்பிக்க குற்றச்சாட்டு



கொழும்பு, ஒக். 01

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்களுக்கும், புலனாய்வுப் பிரிவின் வீழ்ச்சிக்கும் கோட்டாபய ராஜபக்ஷவே பொறுப்பேற்கவேண்டும் என்று அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொலன்னாவ பகுதியில் இடம்பெற்ற ஐ.தே.கவின் பிரசாரக் கூட்டத்தில் வைத்து கருத்து தெரிவிக்கும்போது இந்த விடயத்தை அமைச்சர் சம்பிக்க குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அர்ஜுன் மகேந்திரனை இலங்கைக்குக் கொண்டு வந்து விசாரணை மேற்கொள்வதற்கு முன்னதாக கோட்டாபயவுடன் மிக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்ட உதயங்க வீரதுங்கவை நாட்டுக்குக் கொண்டு வந்து விசாரணை மேற்கொள்ள வேண்டும்.

நாட்டின் விமானப் படையை பெரும் இன்னல்களுக்கு நகர்த்திச் சென்றவர்கள் கோட்டாபயவும், உதயங்க வீரதுங்கவுமே. இவர்கள் எந்தவொரு அரச நிறுவனத்தையும் லாபகரமான நிறுவனமாக மற்றவில்லை.

அதற்கு மாறாக அந்த நிறுவனங்களில் கொள்ளையடித்தார்கள் என்பதே உண்மையாகும். அதனைத் தொடர்ந்து இராணுவத்துக்குச் சொந்தமான இராணுவத் தலைமைச் செயலகத்தைச் சொற்ப பணத்துக்காக விற்பனை செய்தார்கள். 2 கோடி ரூபா பெறுமதியான காணியை எட்டு மில்லியனுக்கு விற்றார்கள். அதன் மூலம் கிடைத்த தரகுப் பணத்தை கொண்டே தங்காலையில் சுற்றுலா விடுதிகளை விலை கொடுத்து வாங்கியுள்ளனர்.

இராணுவத்துக்கு இவ்வாறு செய்தவர்களா இராணுவ வீரர்கள் என்று பெயர் சூடிக் கொள்கிறார்கள்? அரச புலனாய்வுப் பிரிவை விரிவுப்படுத்துவதாகத் தெரிவித்து சுமார் 6000 ஆக இருந்த அவர்களை 12000 ஆக அதிகரித்தனர்.இதன் போது இஸ்லாமியக் கடும் போக்காளர்களையும், முன்னாள் விடுதலைப் புலிகள் போராளிகளையும் இணைத்துக் கொண்டார்கள். அதன் விளைவே நாம் கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல்.

எமக்குச் சுயாதீனமான ஓர் அரசு கிடைத்தவுடன், 2011ஆம் ஆண்டு முதல் புலனாய்வுப் பிரிவினர் எனக் கூறி யார் யாருக்கெல்லாம் கொடுப்பனவுகளை வழங்கினார்களோ அது குறித்து ஆராய்ந்து அவர்களுக்குத் தகுந்த தண்டனை பெற்றுக் கொடுப்போம். அவர்கள் அனைவரையும் போர்க்குற்றவாளிகளாகவும், தேசத் துரோகிகளாகவுமே நாம் காண்கின்றோம்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் முழுமையான பொறுப்புகள் அவர்களுக்குக் கொடுப்பனவுகளை வழங்கிப் போசித்தவர்களுக்கே உள்ளன என்பதை கூறிக் கொள்ள விரும்புகிறேன் – என்றார்.

**நாளை** 02.10.2019 புதன்கிழமை

நட்சத்திரம்: விசாகம் மு.இ 6.39 வரை
திதி : சதுர்த்தி பி.ப 5.02 வரை
இராகுகாலம் : 12.02 – 1.32
சுப நேரம் : 4.32 – 6.02

## புங்குடுதீவு கொலைச் சம்பவம்;

# வித்தியா கொலையாளி உட்பட இருவருக்குத் தூக்குத் தண்டனை

## யாழ். மேல் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு

யாழ்ப்பாணம், ஒக். 01

மாணவி வித்தியா படுகொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட பூபாலசிங்கம் ஜெயக்குமாருக்கும் மற்றொருவருக்கும் தூக்குத் தண்டனை விதித்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் தீர்ப்பளித்துள்ளார்.

புங்குடுதீவுப் பகுதியில் சோமசுந்தரம் சுப்பிரமணியம் என்பவரை கொலை செய்தமைக்காகவே இருவருக்கும் நேற்று யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றம் தூக்குத் தண்டனை வழங்கியது.

அத்துடன் எதிரிகள் இருவரும் இணைந்து சோமசுந்தரம் சுப்பிரமணியம் என்பவரின் உடைமையில் இருந்து 10 ஆயிரம் ரூபா பணத்தைக் கொள்ளையிட்டமைக்காக 10 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்த மேல் நீதிமன்றம், இருவரும் 10 ஆயிரம் ரூபா தண்டப் பணம் செலுத்தவும் அதனைச் செலுத்தத் தவறின் 10 மாதங்கள் சாதாரண சிறைத் தண்டனையை அனுபவிக்க நேரிடும் எனவும் உத்தரவிட்டது.

யாழ்.தீவகம் புங்குடுதீவில் 2010ஆம் ஆண்டு மே மாதம் 28ஆம் திகதி சோமசுந்தரம் சுப்பிரமணியம் என்பவர் கொலை செய்யப்பட்டார். மது அருந்துவதற்காக பிற்பகல் 1.30 மணிக்குச் சென்ற அவர் மாலை சடலமாக மீட்கப்பட்டார்.

சம்பவத்தையடுத்து புங்குடுதீவு 9ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பூபாலசிங்கம் ஜெயக்குமார், செல்வராசா கிருபாகரன் ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் இருவருக்கும் எதிராக ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் சுருக்கமுறையற்ற விசாரணைகள் இடம்பெற்றன. யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றால் 2011ஆம் ஆண்டு சந்தேகநபர்கள் இருவருக்கும் பிணை வழங்கப்பட்டது.

சந்தேகநபர்கள் இருவருக்கும் எதிராக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் 2018ஆம் ஆண்டு டிசெம்பரில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

சோமசுந்தரம் சுப்பிரமணியம் என்பவரை கொலை செய்தமைக்காக தண்டனைச் சட்டக்கோவை 296ஆம் பிரிவின் கீழ் முதலாவது குற்றச்சாட்டும் சோமசுந்தரம் சுப்பிரமணியம் என்பவரின் உடைமையிலிருந்து 10 ஆயிரம் ரூபா பணத்தை கொள்ளையடித்தமைக்காக தண்டனைச் சட்டக்கோவை 380ஆம் பிரிவின் கீழ் இரண்டாவது குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டது.

இந்த வழக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் முன்னிலையில் தொடர் விளக்கமாக கடந்த ஜூலை மாதம் இடம்பெற்றது.

வழக்குத் தொடுநர் சார்பில் அரச சட்டவாதி மாதினி விக்னேஸ்வரன் வழக்கை நெறிப்படுத்தினார்.

முதலாவது சந்தேகநபர் சார்பில் சட்டத்தரணி அபிதனும் இரண்டாவது சந்தேகநபர் சார்பில் விஸ்வலிங்கம் திருக்குமரனும் முன்னிலையாகினர். வழக்கு நேற்றுத் திங்கட்கிழமை தீர்ப்புக்காகக் கூப்பிடப்பட்டது.

இந்த நிலையில் வழக்கில் எதிரிகள் இருவரையும் குற்றவாளிகளாகக் கண்டு தீர்ப்பளித்த யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர், அவர்கள் இருவருக்கும் தூக்குத் தண்டனை வழங்கி தண்டனைத் தீர்ப்பளித்தார். (ஐ)

## பெரமுனவைத் தோற்கடிக்க சகலரும் ஒன்றுபடவேண்டும்

### அசாத் சாலி கோரிக்கை

கொழும்பு, ஒக். 01

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, இனவாதச் செயற்பாடுகளுடன் தேர்தலை வெற்றி கொள்ள முயற்சி செய்கிறது. இந்த விடயம் தொடர்பில், சிறுபான்மையினரான முஸ்லிம், தமிழ் மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டுமென, மேல் மாகாண சபையின் முன்னாள் ஆளுநர் அசாத் சாலி தெரிவித்தார்.



தற்போதைய அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் அவரிடம் வினவிய போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மஹிந்தவுடன் இருக்கும் அணிகள் இனவாதப் போக்குடையன. அந்த அமைப்புகள், நாட்டைப் பதற்ற நிலையில் வைத்திருக்கவேண்டுமென்ற நோக்கில் செயற்படுகின்றன.

இவ்வாறான இந்தச் சந்தர்ப்பத்தில், முஸ்லிம் தலைமைத்தவமும் தமிழ் தலைமைத்துவமும் ஒன்றுபட்டு, இரு சமூகங்களுக்கிடையே காணப்பட்ட பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தக் காலகட்டதில், முஸ்லிம், தமிழ் சமூக உறவு பலம்வாய்ந்த உறவாக கட்டியெழுப்பப்பட வேண்டும். உறுதியான கட்டுக்கோப்புடன் ஒப்பந்தம் மேற்கொண்டு, தமிழ், முஸ்லிம் அரசியல் தலைமைத்துவங்கள் சீராகப் பயணிக்குமாயின், இரு தரப்புகளுக்கிடையே எந்தப் பிரச்சினையும் இருக்காது – என்றார். (ஐ)

## தபால் மூலமான வாக்களிப்புக்கு விண்ணப்பங்கள் ஏற்பது நிறைவு

கொழும்பு, ஒக. 01

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் பணிகள் நேற்று நள்ளிரவுடன் நிறைவுக்கு வந்தன.

ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 30ஆம் மற்றும் 31 ஆம் திகதிகளில் இடம்பெறும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்திருந்தது.

2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்படும். (ஐ)

## குடும்ப உறுப்பினர்களுக்கு இடம் வழங்காராம் சஜித்

கொழும்பு, ஒக். 01

அரசியல் நடவடிக்கைகளின் போது, தான் ஒருபோதும் குடும்ப உறுப்பினர்களை இணைத்துக் கொள்வதில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் எல்பிட்டிய பகுதி ஆதரவாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது அவர் இதனைக் கூறியுள்ளார்.

குடும்ப உறுப்பினர்களை இணைத்துக்கொள்ளாமல் தான் தொடர்ந்தும் தனது அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## ஓய்வு பெற்ற தனது ஊழியர்களை சேவைக்கு அழைக்கும் ரயில்வே

கொழும்பு, ஒக். 01

ஓய்வுபெற்ற ஊழியர்களை மீண்டும் சேவைக்கு அழைப்பதற்கு ரயில்வே திணைக்களம் தீர்மானித்துள்ளது.

அதன்படி, இதுவரை 20 ஓய்வு பெற்ற அதிகாரிகள் சேவைக்கு அழைக்கப்பட்டுள்ளனர் என ரயில்வே பொது முகாமையாளர் டிலந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பணிப்பகிஷ்கரிப்பு தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுமாயின், அவர்களை சேவையில் ஈடுபடுத்தி ரயில் சேவைகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்படுகின்ற நிலையிலும், கண்டி, இறம்புக்கனை, சிலாபம், காலி மற்றும் அவிசாவளையிலிருந்து கொழும்பு – கோட்டை நோக்கி ரயில்கள் நேற்று முற்பகல் வரை சேவையில் ஈடுபட்டுள்ளன.

வார இறுதி நாள்களில் பயணிக்கவிருந்த அனைத்து விசேட ரயில்களும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுக்கும் தொழிற்சங்கங்கள் மற்றும் நிதி அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு இடையில் நேற்று கலந்துரையாடலொன்று இடம்பெற இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மின்தடை

யாழ்ப்பாணம், ஒக். 01

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை–

**யாழ் பிரதேசத்தில் –**

மண்கும்பான், அல்லைப்பிட்டி, வெண்புரவிநகர், மண்கும்பான் நீர்ப்பாசன சபை ஆகிய இடங்களிலும் –

**கிளிநொச்சி பிரதேசத்தில் –**

கனகபுரம், அம்பாள்குளம், உருத்திரபுரம், ஜெயந்திநகர், சிவநகர், கரைச்சி தெற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# விசாரணைக்கு ஒத்துழைக்க மறுக்கின்றார் கரன்னகொட



கொழும்பு, ஒக். 01

தமது விசாரணைகளுக்கு முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட ஒத்துழைக்கவில்லை எனக் குற்றப் புலனாய்வுத் துறையினர் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்திக்காணாமல் செய்யப்பட்டமை தொடர்பில் வசந்த கரன்னாகொட மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குற்றப் புலனாய்வுத் துறையினர் கடந்த வாரம் பி அறிக்கையை மன்றில் சமர்ப்பித்தனர். இதன்போது கரன்னாகொடவிடம் சாட்சியத்தைப் பெற்றுக் கொள்வதற்காக தாம் 6 தடவைகள் கோரிக்கை விடுத்தபோதும் அவர் சாட்சியத்துக்காக வரவில்லை எனக் குற்றப் புலனாய்வுத் துறையினர் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த 18ஆம் திகதி வசந்த கரன்னாகொட சாட்சியம் வழங்கியபோதும் செப்ரெம்பர் 20ஆம் திகதி அவர் சமூகம் தரவில்லை. தமது மனைவி கடந்த இரண்டு மாதங்களாகச் சுகவீனமடைந்துள்ளமையால், தம்மால் சமூகம் தர முடியவில்லை என வசந்த கரன்னாகொட அறிவித்தார் எனக் குற்றப் புலனாய்வுத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

எனினும் 19ஆம் திகதி அவர் செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் பங்கேற்றிருந்தார் என்பதை குற்றப் புலனாய்வுத்துறையினர் மன்றுக்கு அறிவித்தனர். (ஐ)

# பீகாரில் கனமழை!



## வெள்ளத்தில் சிக்கி 29 பேர் உயிரிழப்பு



பாட்னா, ஒக். 01

பீகார் மாநிலத்தில் கனமழை பெய்து வரும் நிலையில் மழை தொடர்பான விபத்துகளில் சிக்கி இதுவரை 29 பேர் உயிரிழந்துள்ளனர்.

பீகார் மாநிலத்தில் கடந்த சில தினங்களாக கனமழை பெய்து வருகிறது. பாட்னாவில் வெள்ளிக்கிழமை மாலை முதல் நேற்றுக் காலை வரை 200 மி.மீ. மழை கொட்டித் தீர்த்துள்ளது.

இதனால் தாழ்வான பகுதிகள் தண்ணீர் சூழ்ந்து வெள்ளக்காடாக காட்சியளிக்கின்றன. பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. தண்ணீர் சூழ்ந்த பகுதிகளில் இருந்து படகுகள் மூலம் மக்கள் மீட்கப்படுகின்றனர். பாட்னாவில் மட்டும் 26 ஆயிரம் மக்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

பாட்னாவில் வெள்ள நிவாரணப் பொருள்களை கொண்டு செல்வதற்காக 2 ஹெலிகொப்டர்களை அனுப்பும்படி விமானப்படைக்கு மாநில அரசு கோரிக்கை விடுத்துள்ளது. மழை தொடர்பான விபத்துக் களில் சிக்கி இதுவரை 29 பேர் பலி யாகியுள்ளனர் என பேரிடர் மேலாண்மை ஆணையம் தெரிவித்துள்ளது.

இதேபோல் உத்தர பிரதேசம், உத்தர காண்ட், மத்திய பிரதேசம், ராஜஸ்தான், குஜராத் போன்ற மாநிலங்களிலும் மழை பெய்து வருகிறது. கடந்த 4 நாள்களில் மட்டும் நாடு முழுவதும் மழை தொடர்பான விபத்துக்களில் 110 பேர் பலியாகி உள்ளனர். உ.பி.யில் மட்டும் 79 பேர் உயிரிழந்துள்ளனர் என தகவல் வெளியாகி உள்ளது.

# குழந்தைகளுக்கு இலவச இதய அறுவைச் சிகிச்சை

## மம்தா பானர்ஜி அறிவிப்பு

கொல்கத்தா, ஒக். 01

மேற்கு வங்காளத்தில் குழந்தைகளுக்கு இலவசமாக இதய அறுவை சிகிச்சை அளிக்கப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார்.

இதய நோய் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஆண்டுதோறும் செப்ரெம்பர் 29ஆம் திகதி உலக இதய தினமாக கடைப் பிடிக்கப் படுகிறது. அந்தவகையில் நேற்றுமுன்தினம் இந்த தினம் உலகம் முழுவதும் அனுசரிக்கப்பட்டது. இதையொட்டி மேற்கு வங்காள முதலமைச்சர் மம்தா பானர்ஜி, மாநில மக்களுக்கு சிறப்பு அறிவிப்புகளை வெளியிட்டார்.



இது தொடர்பாக அவர் தனது டுவிட்டர் தளத்தில் கூறுகையில், ‘இன்று (நேற்றுமுன்தினம்) உலக இதய தினம். ஆரோக்கியமான உடலுக்கு, ஆரோக்கியமான இதயம் தேவை. மாநில அரசின் ‘சிசு சதி’ திட்டத்தின் கீழ், குழந்தைகளுக்கு இதய நோய் தொடர்பான அறுவை சிகிச்சைகள் அனைத் தும் இலவசமாக செய்யப்படுகின்றன. இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்’ என்று குறிப்பிட்டு இருந்தார். இதைப்போல மாநிலம் முழுவதும் அரசு மருத்துவமனைகளில் இதய நோய்களுக்கு இலவசமாக சிகிச்சை அளிக்கப்படுவதாகவும் கூறியிருந்தார்.

# இண்டிகோ விமானத்தில் தீ உயிர் தப்பினார் அமைச்சர்

பனாஜி, ஒக். 01

கோவாவில், நடுவானில் பறந்த இண்டிகோ விமானத்தின் இயந்திரத்தில் தீப்பற்றியதால் அவசரமாக தரையிறக்கப்பட்டது.

கோவா மாநிலத்தின் டபோலிம் நகரில் உள்ளது கோவா சர்வதேச விமான நிலையம். இங்கிருந்து நேற்று இரவு டில்லி நோக்கி இண்டிகோ விமானம் ஒன்று புறப்பட்டது. விமானத்தில் மற்ற பயணிகளுடன் கோவா சுற்றுச்சூழல் அமைச்சர் நிலேஷ் கப்ரால் மற்றும் அவரது மெய்க்காப்பாளரும் இருந்தனர்.

ஓடுதளத்தில் இருந்து வானில் பறந்த சற்று நேரத்தில் விமானத்தின் எஞ்ஜின் பகுதியில் தீப்பற்றியுள்ளது. இதை கண்டறிந்த விமானிகள் உடனடியாக விமானத்தை கோவா விமான நிலையத்தில் தரையிறக்கினர். இதனால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது. இது குறித்து விமான நிலைய அதிகாரிகள் ஆய்வு செய்து வருகின்றனர்.

# உலகமே கைவிட்டாலும் காஷ்மீருக்கு நாம் துணை

## இம்ரான்கான் தெரிவிப்பு

இஸ்லாமாபாத், ஒக். 01

உலகமே கைவிட்டாலும் காஷ் மீர் மக்களுக்கு நாங்கள் துணைநிற்போம் என பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் கூறியுள்ளார்.

ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் சமீபத்தில் உரையாற்றிய பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான், அதில் காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்பட்ட விவகாரத்தை எழுப்பி னார். இதற்கு இந்தியா சார்பில் பதிலடி கொடுக்கப்பட்ட நிலையில், மீண்டும் காஷ்மீர் விவகாரம் குறித்து பேசியுள்ளார்.

அமெரிக்காவில் இருந்து நேற்றுமுன்தினம் நாடு திரும்பிய அவர், இஸ்லாமாபாத் விமான நிலையத்தில் தன்னை வரவேற்க வந்த கட்சி தொண்டர்களிடையே இது குறித்து பேசினார்.

அப்போது அவர் கூறுகையில் -



‘காஷ்மீர் மக்களுக்கு துணை நிற்பது ஜிகாத் ஆகும். இதை நாங்கள் கடவுளுக்காக செய்வோம். காஷ்மீரிகளை உலக நாடுகள் ஆதரித்தாலும் அல்லது கைவிட்டாலும், நாங்கள் அவர்களுக்கு துணை நிற்போம்’ என்று தெரிவித்தார்.

இது ஒரு போராட்டம் என்றுகூறிய இம்ரான்கான், இந்த விவகாரத்தில் சூழல் சரியாக அமையா விட்டாலும் மக்கள் மனம் தளரக் கூடாது எனவும், பாகிஸ்தான் மக்கள் காஷ்மீரிகளுக்கு ஆதரவாக இருந்தால், அவர்கள் வெற்றி பெறுவார்கள் என்றும் கூறினார்.




# ஆப்கன் வன்முறை; 32 பேர் உயிரிழப்பு

காபூல், ஒக். 01

ஆப்கானிஸ்தானில் நிகழ்ந்த தேர்தல் வன்முறையில் 32 பேர் பலியாகினர்.

ஆப்கானிஸ்தானில் 2 முறை ஒத்திவைக்கப்பட்ட அதிபர் தேர்தல் இறுதியாக கடந்த சனிக்கிழமை நடந்து முடிந்தது.

இது அங்கு 2001ஆம் ஆண்டு தலிபான்கள் ஆட்சி அகற்றப்பட்ட பின்பு நடந்து முடிந்து இருக்கும் 4ஆவது அதிபர் தேர்தல் ஆகும். இதில் தற்போதைய அதிபர் அஷ்ரப்கனிக்கும், தலைமை நிர்வாகி அப்துல்லா வுக்கும் இடையே பலத்த போட்டி நிலவுகிறது.

இந்த தேர்தலின் போது நாடு முழுவதும் 132 பயங்கரவாத தாக்குதல்கள் நடந்துள்ளன என தெரிவிக்கப்பட்டு உள்ளது. இதில் 32 பேர் உயிர் இழந்தனர் எனவும், 123 பேர் படுகாயம் அடைந்தனர் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த 132 தாக்குதல்களில் 64 தாக்குதல்களுக்கு தலிபான் பயங்கரவாத அமைப்பு பொறுப்பு ஏற்றது.

# என்னை பதவியை விட்டு நீக்க முயற்சிப்பது வரலாற்று ஊழல்

## ஜனநாயகவ கட்சியினர் மீது டிரம்ப் ஆவேச தாக்கு



வொஷிங்டன், ஒக். 01

என்னை பதவியை விட்டு நீக்க முயற்சிப்பது வரலாற்று ஊழல் என ஜனநாயக கட்சியினரை, டிரம்ப் ஆவேசமாக விமர்சித்துள்ளார்.

அமெரிக்காவில் அடுத்த ஆண்டு நடைபெறும் ஜனாதிபதி தேர்தலில் டிரம்பை எதிர்த்து ஜனநாயக கட்சி சார்பில் முன்னாள் துணை ஜனாதிபதி ஜோ பிடென் போட்டியிடுவார் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது.

இந்த நிலையில், ஜோ பிடெனுக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில், உக்ரைனில் பணியாற்றிய அவரது மகனுக்கு எதிராக விசாரணை நடத்த வேண்டும் என்று அந்த நாட்டின் அதிபர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கியை டிரம்ப் மிரட்டினார் என குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இந்த விவகாரத்தில் டிரம்பை பதவியை விட்டு நீக்குவதற்கான விசாரணையை அமெரிக்க நாடாளுமன்றத்தில் (பிரதிநிதிகள் சபை) ஜனநாயக கட்சி தொடங்கி உள்ளது.

இந்த விசாரணை வேடிக்கையானது என டிரம்ப் ஏற்கனவே கருத்து தெரிவித்திருந்த நிலையில், தன்னை பதவி நீக்க கோரும் ஜன நாயக கட்சியினரின் முயற்சி அமெரிக்க அரசியல் வரலாற்றின் மிகப்பெரிய ஊழல் என கூறி ஆவேசப்பட்டுள்ளார். இது குறித்து அவர் வீடியோ மூலம் வெளியிட்டுள்ள செய்தியில் கூறியிருப்பதாவது:

இப்போது நடப்பது அமெரிக்க அரசியல் வரலாற்றின் மிகப்பெரிய ஊழல். ஜனநாயக கட்சியினர் உங்கள் துப்பாக்கிகளை எடுத்துச் செல்ல விரும்புகிறார்கள். உங்கள் சுகாதாரத்தையும், உங்கள் வாக்குகளையும், உங்கள் சுதந்திரத்தையும் பறிக்க நினைக்கிறார்கள். நான் மக்களின் நலனுக்காக போராடுவதால் அவர்கள் (ஜனநாயக கட்சியினர்) என்னை தடுக்க விரும்புகிறார்கள். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# சிலியில் கடும் நிலநடுக்கம் ரிச்டரில் 6.8 ஆகப் பதிவு



சான்டியாகோ, ஒக். 01

சிலி நாட்டில் கடும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவுகோலில் 6.8 ஆக பதிவானது.

தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றான சிலி நாட்டில் நேற்றுமுன்தினம் கடும் நிலநடுக்கம் ஏற்பட்டது. சிலி நாட்டின் தலைநகர் அருகே அமைந்துள்ள டால்கா நகருக்கு மேற்கே 134 கிலோ மீற்றர் தூரத்தில், பூமியின் அடியில் 10 கிலோமீற்றர் ஆழத்தில் இது ஏற்பட்டது.

இது ரிச்டர் அளவில் 7.2 ஆக பதிவானதாக முதலில் தகவல்கள் வெளியாகின. பின்பு சிலி தேசிய நில அதிர்வு ஆய்வு மையம், 6.8 ரிச்டர் எனத் தெரிவித்தது.

இது குறித்து அதிகாரிகள் தெரிவிக்கையில், நிலநடுக்கம் காரணமாக அப்பகுதியில் உள்ள வீடுகள், கட்டடங்கள் குலுங்கின. சாலைகள், கட்டடங்கள் போன்றவற்றில் சிறு சிறு பிளவுகள் ஏற்பட்டன. உயிர்ச்சேதம் ஏதும் இல்லை. சுனாமி எச்சரிக்கை ஏதும் விடுக்கப்படவில்லை என தெரிவித்தனர்.

உலகின் 90 சதவீத நிலநடுக்கங்கள் ஏற்படும் நெருப்பு வளையம் பகுதியில் சிலி நாடு உள்ளது. கடந்த 2010 ஆம் ஆண்டில் 8.8 ரிச்டர் அளவிலான நிலநடுக்கமும், 1960ஆம் ஆண்டு 9.5 ரிச்டர் அளவிலான மிகப்பெரிய நிலநடுக்கமும் சிலி நாட்டில் ஏற்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

# எலிசபெத் மகாராணியிடம் மன்னிப்பு கேட்ட பிரதமர்

நாடாளுமன்றம் முடக்கம் சட்ட விரோதம் என நீதிமன்றம் தீர்ப்பு அளித்ததை அடுத்து இங்கிலாந்து ராணி எலிசபெத்திடம் பிரதமர் போரிஸ் ஜோன்சன் மன்னிப்பு கேட்டார்.

இங்கிலாந்து நாடாளுமன்றத்தை 5 வார காலத்துக்கு முடக்கி பிரதமர் போரிஸ் ஜோன்சன் நடவடிக்கை எடுத்தார். அதை ராணி இரண்டாம் எலிசபெத் ஏற்றார்.

ஐரோப்பியக் கூட்டமைப்பில் இருந்து இங்கிலாந்து வெளியேறுவதற்கான 'பிரெக்ஸிட்' நடவடிக்கைக்கான கெடு நெருங்கி வரும் நிலையில் நாடாளுமன்றத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கையில் இருந்து தப்புவதற்குத்தான் போரிஸ் ஜோன்சன் இப்படி செய்தார் என்பது எதிர்க்கட்சி மட்டுமல்ல, ஆளுங்கட்சியின் எம்.பி.க்கள் பலரின் குற்றச்சாட்டும் ஆகும்.

ஆனால் அவரோ, புதிய அரசின் கொள்கைகளை அறிவித்து ராணி இரண்டாம் எலிசபெத் நாடாளுமன்றத்தில் பேசுவதற்காகத்தான் நாடாளுமன்றம் முடக்கப்பட்டதாக கூறிய விளக்கம் ஏற்கப்படவில்லை. அவரது நடவடிக்கைக்கு எதிராக, 'பிரெக்ஸிட்' எதிர்ப்பாளரான இந்திய வம்சாவளி ஜினா மில்லர், அந்த நாட்டின் உயர் நீதிமன்றம் வழக்கு போட்டார். இந்த வழக்கை உயர் நீதிமன்றம் விசாரித்து நாடாளுமன்ற முடக்கம், சட்டவிரோதம் என கடந்த வாரம் தீர்ப்பு அளித்தது. இது ராணி இரண் டாம் எலிசபெத்துக்கு தர்மசங்கடமாக அமைந்தது. இது தொடர்பாக பிரதமர் போரிஸ் ஜோன்சன், அவருடன் தொலைபேசியில் பேசி வருத்தம் தெரிவித்து மன்னிப்பு கேட்டார் என பிரதமர் அலுவலக வட்டாரங்கள் கூறுகின்றன.

# ராட்டினத்தில் இருந்து விழுந்து 2 பேர் சாவு!

மெக்சிக்கோ நாட்டின் தலைநகர் மெக்சிக்கோ சிட்டியில் லாபெரியா என்ற பெயரில் பிரபல பொழுதுபோக்கு பூங்கா இயங்கி வருகிறது. இங்கு கடந்த சனிக்கிழமை வழக்கம் போல் ஏராளமான மக்கள் திரண்டு கேளிக்கையில் ஈடுபட்டிருந்தனர். இது போன்ற பொழுதுபோக்கு பூங்காக்களில் 'ரோலர் கோஸ்டர்' என்று அழைக்கப்படும் ராட்சத ராட்டினம் மிகவும் பிரபலமானது.

தண்டவாளம் போல் வடிவமைக்கப்பட்ட இரும்பு கம்பியில் சக்கரங்களின் மூலம் நகரும் பெட்டிகள் தரையில் இருந்து மேல் நோக்கி சென்று அதே வேகத்தில் கீழே வருவது தான் 'ரோலர் கோஸ்டர்' சவாரி.

அந்த வகையில் லாபெரியா பொழுது போக்கு பூங்காவில் பலரும் 'ரோலர் கோஸ்டர்' ராட்டினத்தில் ஏறி 'திரில்' சவாரி செய்தனர். அப்போது ராட்டினத்தின் கடைசி பெட்டி தண்டவாளத்தை விட்டு விலகி சரிந்தது.

இதில் அந்த பெட்டியில் சவாரி செய்தவர்



கள் மேலே இருந்து தரையில் விழுந்தனர். இதில் பலத்த காயம் அடைந்த 2 ஆண்கள் சம்பவ இடத்திலேயே உயிர் இழந்தனர். மேலும் 2 பெண்கள் உட்பட 5 பேர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்தை தொடர்ந்து பொழுது போக்கு பூங்கா உடனடியாக மூடப்பட்டது. சம்பவம் குறித்து பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சீனத் தொழிற்சாலையில் தீ 19 பேர் உடல் கருகிப் பலி!



பீஜிங், ஒக். 01

சீனாவின் நிங்காய் கவுண்டியில் உள்ள ஒரு தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 19 பேர் பலியாகி உள்ளனர்.

சீனாவின் கிழக்குப் பகுதியில் உள்ளது நிங்காய் கவுண்டி. இங்குள்ள தொழிற்பூங்காவில் உள்ள வீட்டு உபயோகப் பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலையில் நேற்றுமுன்தினம் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. ஆலையின் ஒரு பகுதியில் தீப்பிடித்து எரியத் தொடங்கியதும் தொழிலாளர்கள் உடனடியாக வெளியேறினர். ஆனால், தீ வேகமாகப் பரவியதால், சிலர் தீயில் சிக்கிக் கொண்டனர்.

தீ விபத்து குறித்து தகவல் அறிந்த தீயணைப்பு வீரர்கள் தீவிரமாக போராடி தீயை கட்டுப்படுத்திய பின்னர் மீட்பு பணியில் ஈடுபட்டனர்.

இந்த விபத்தில் 19 பேர் உயிரிழந்துள்ளனர். 8 பேர் காயங்களுடன் மீட்கப்பட்டனர். அவர்களில் 3 பேருக்கு கடுமையான தீக்காயம் ஏற்பட்டிருந்ததால் மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தீ விபத்து குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. சீனாவில் தொழிற்சாலைகளில் பாதுகாப்பு குறைபாடு காரணமாக தொடர்ந்து விபத்து ஏற்படுவது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikathir



# இலங்கையில் அடுத்தடுத்து

# யானைகள் மர்ம மரணம்: கொடிய விஷம் வைத்து கொல்லப்படுகின்றனவா?



இலங்கையின் காடுகளில் வசிக்கும் காட்டு யானைகள் தற்போது பெரும் அச்சுறுத்தலை எதிர்நோக்கி வருகின்றன.

புத்தளம் மற்றும் ஹபரண ஆகிய பகுதிகளில் காட்டு யானைகள் கடந்த காலங்களில் மர்மமாக மரணிக்கும் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இந் நிலை யிலேயே, காட்டு யானைகளுக் கான அச்சுறுத்தல் அதிகரித்துள்ள தாகக் கூறப்படுகின்றது.

ஹபரண – ஹிரிவடுன்ன – கும்பி குளம் வனப் பகுதியில் மர்மமான முறையில் மரணித்த 7 காட்டு யானை களின் உடல்கள் 27 மற்றும் 28ஆம் திகதிகளில் கண்டெடுக்கப்பட்டிருந்தன.

கடந்த 27ஆம் திகதி நான்கு யானைகளின் உடல்களும், 28ஆம் திகதி மூன்று யானைகளின் உடல் களும் கண்டெடுக்கப்பட்டிருந்தன.

இவ்வாறு இறந்த அனைத்து யானைகளும் பெண் யானைகள் என விசாரணைகளின் ஊடாக கண்ட றியப்பட்டுள்ளது.

மர்மமான முறையில் மரணித் துள்ள யானைகளில் மூன்று யானைகள் கர்ப்பம் தரித்திருந்தன என விசாரணைகளை நடத் திய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த யானைகள் மரணித்தமைக் கான காரணம் இதுவரை உறுதி செய்யப்படாத நிலையில், தொடர்ந்து விசா ரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

சிகிரிய வனவிலங்கு திணைக்கள அதிகாரிகள், இராணுவம், ஹபரண பொலிஸார் இணைந்து பிரதேசத்தில் சோதனை நடவடிக்கை களை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில், நேற்றையமுன் தினம் மரணித்த யானையின் குட்டி யொன்று தாய் யானையை விட்டு பிரியாது சுற்றிக் கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

எனினும், மரணித்த யானையின் பிரேத பரிசோதனைகளை மேற்கொள் வதற்காக அந்தக் குட்டி யானையை வேறொரு இடத்திற்கு அனுப்பி வைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

தொடர்ச்சியாக யானைகள் மரணிக்கும் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நடத்துவதற்காக கிரிந்தலை, அனுராத புரம் மற்றும் வடமேல் மாகாண மிருக வைத்திய அதிகாரிகள் உள்ளிட்ட நான்கு குழுக்கள் வருகை தந்துள்ளன.

இந்த யானைகளின் மரணத்திற்கு எவரேனும் காரணம் என கண்டறியப் படும் பட்சத்தில், அவர் களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலன்னறுவை வலயத்திற்கு பொறுப்பான வனவிலங்கு பிரதிப் பணிப்பாளர் டபிள்யூ.டி.எம்.ஜே. விக்ரமசிங்க தெரிவித்தார்.

இதேவேளை, புத்தளம் – நவகத்தேகம பகுதி யில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் யானை யொன்று இறந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டது,

அந்த யானையின் ஒரு தந்தம் வெட்டியெடுக்கப் பட்டிருந்ததாக அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

இந்த நிலையில் யானை மீதான பிரேத

**“இந்த யானைகளின் மரணத்திற்கு எவரேனும் காரணம் என கண்டறியப் படும் பட்சத்தில், அவர் களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலன்னறுவை வலயத்திற்கு பொறுப்பான வனவிலங்கு பிரதிப் பணிப்பாளர் டபிள்யூ.டி.எம்.ஜே.விக்ரம சிங்க தெரிவித்தார்.**

பரிசோதனையின்போது, யானையின் உடலில் விஷம் கலந்திருந்தமை கண்டறியப்பட்டதாக விசாரணைகளை நடத்திய அதிகாரிகள் கூறியிருந் தனர்.

இதன்படி, கடந்த ஒரு வார காலப் பகுதிக்குள் மர்மமான முறையில் 8 யானைகள் இறந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### ‘பின்னணி புரியவில்லை’

இலங்கையில் ஒரே தடவையில் யானைகள் கூட்டாக கொல்லப்பட்ட முதலாவது சம்பவம் இது. என சூழலியலாளர் சஞ்ஜீவ ஷாமீகர பி.பி.ஸி தமி ழுக்கு தெரிவித்தார்.

இலங்கையில் காட்டு யானைகளுக்கும் மனிதர் களுக்கும் இடையிலான மோதல்கள் பல வருடங்களாக நடைபெற்று வருகின்ற போதிலும், ஒரே சமயத்தில் இத்தனை யானைகள் எந்தவொரு சந்தர்ப்பத்தி லும் மரணிக்கவில்லை என அவர் கவலை வெளி யிடுகின்றார்.

இதுவரை நடத்தப்பட்ட விசாரணை களின் ஊடாக, யானைகளுக்கு விஷம் வைக்கப்பட்டுள்ளன எனச் சந்தேகிக்கப் படுகிறது எனவும் அவர் கூறினார்.

இலங்கையில் மனிதர்களுக்கும், யானைகளுக் கும் இடையில் காணப்பட்ட பிரச்சினைகளின் போது, கடந்த காலங் களில் தனியாக நடமாடும் ஆண் யானைகளே அதிகளவில் மரணித்திருந்தன என சுட்டிக்காட்டிய அவர், இன்று ஒரே தடவையில் பெண் யானைகள் கொல்லப்பட்டுள்ளமையின் பின்னணி என்னவென புரியவில்லை எனவும் கூறினார்.

யானைகள் மர்மமாக மரணித்துள்ள பகுதி கடந்த காலங்களில் அதிகளவில் காடழிப்பிற்கு உட்பட்ட பகுதி என அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

இந்தப் பகுதிகளில் அபிவிருத்தி பணிகளை

## பின்னணியில் செயற்படுபவர்கள் யார்?

மேற்கொள்ளும் நோக்குடன் அரசியல் பின்னணியில் இந்த யானைகள் கொல்லப் பட்டனவா என்பது குறித்தும் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என அவர் கோரிக்கை விடுக்கின்றார்.

### யானைகள் எதிர் நோக்கும் அச்சுறுத்தல்...

கடந்த ஐந்து முதல் ஆறு வருட கணிப்புகளின் பிரகாரம், வருடமொன்றுக்கு பல்வேறு காரணங்களினால் 280 வரையான யானைகள் மரணிக்கின்றன என சஞ்ஜீவ ஷாமீகர தெரிவிக்கின்றார்.

இதன்படி, இலங்கையில் கடந்த ஆண்டில் மாத்திரம் 278 காட்டு யானைகள் மரணித்துள் ளமை பதிவாகியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

மனிதர்களுக்கும், காட்டு யானைகளுக்கும் இடையிலான மோதல்களின் போதே அதி களவிலான யானைகள் கடந்த காலங்களில் மரணித்துள்ள தாக அவர் கூறுகின்றார்.

இந்த பிரச்சினைகளை தேசிய பிரச்சினையாக கருத்தில் கொண்டு அரசாங்கம் விசார ணைகளை நடத்த வேண்டும் என அவர் கேட்டுக்கொள்கின்றார்.

### ‘காடுகள் அழிக்கப்படுவதே காரணம்’

இலங்கையில் 2010ஆம் ஆண்டு இறுதியாக நடத்தப்பட்ட கணிப்பின் பிரகாரம், 2.8 வீத ஈர வலய காடுகளும், 17 வீத உலர் வலய காடுகளும் காணப்படுகின்றன.

எனினும், பல்வேறு காரணங்களின் பிரகாரம், 17 வீதமான காணப்பட்ட உலர் வலய காடுகள் இன்று 15 வீதம் வரை குறைவடைந்துள்ளன என சஞ்ஜீவ ஷாமீகர சுட்டிக்காட்டுகின்றார்.

இந்த நிலையில், அதிகளவிலான காட்டு யானைகள் ஈர வலய பகுதிகளிலேயே வாழ்ந்து வருகின்றன எனவும், காடழிப்பு காரணமாக அவை மக்கள் செறிந்து வாழும் பகுதிகளுக்கு வர வேண்டிய நிர்ப்பந் தம் ஏற்பட்டுள்ளது எனவும் அவர் கூறுகின்றார்.

இலங்கையில் இறுதியாக நடத்தப்பட்ட ஆய்வுப்படி, 6000 முதல் 6500 வரையான யானைகளே வாழ்ந்து வருகின்றன என அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

யானைகள் சுற்றுச்சூழலுக்கு பெரும் பங்களிப் பைச் செய்கின்றன எனக் கூறிய அவர், வனப் பகுதி கள் செறிவடைவதற்கு யானைகளின் பங்களிப்பு மிக முக்கியமானது எனவும் குறிப்பிடுகின்றார்.

குறிப்பாக யானைகள் உட்கொள்ளும் உணவு வகையில் 40 சதவீதம் மட்டுமே சமிபாடு அடையும் எனவும், எஞ்சிய 60 சதவீத உணவு உட்கொண்ட விதத்திலேயே கழிவாக வெளியேறும் எனவும் அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

இவ்வாறு வெளியேறும் கழிவில் அதிகளவிலான விதைகள் காணப்படுகின்றன என சுட்டிக்காட்டிய சூழலியலாளர் சஞ்ஜீவ ாமீகர, அவ்வாறான விதை களின் ஊடாக வனப் பகுதிகள் மீண்டும் செழிப்படைய செய்யப்படும் என குறிப்பிடுகின்றார்.

அதேபோன்று, மரங்களின் கிளைகளை யானைகள் உடைத்து உட்கொள் கின்றமையினால், மரங்கள் மீண்டும் துளிர்விடுகின்றன எனவும், அவை ஏனைய உயிரினங்களுக்கு சிறந்த உண வாக அமையும் எனவும் அவர் கூறுகின்றார்.

உலர் வலய காடுகள் பாதுகாக்கப்படுகின்ற மைக்கு, யானைகளின் பங்களிப்பு மிக முக்கிய மானது என சூழலியலாளர் சஞ்ஜீவ ஷாமீகர குறிப் படுகின்றார். *



நன்றி :- பி.பி.ஸி. தமிழ்

# அதிபரை நியமிக்குமாறு கோரி முல்லைத்தீவில் ஆர்ப்பாட்டம்

## பாரதி மகா வித்தியாலயம் முன்பாக






முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் உள்ள ரெட்பானா பகுதியில் முல்லைத்தீவு கல்வி வலயத்தின் கீழ் இயங்கும் பாரதி மகாவித்தியாலயப் பெற்றோர்கள், மாணவர்கள் இணைந்து பாடசாலை வாயிலை மூடிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பாடசாலைக்கு அதிபர் ஒருவரை உடனடியாக நியமிக்குமாறு கோரியும், தரம்1 ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமாறு கோரியும், பிரதி அதிபரை நியமிக்கக் கோரியும் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

இந்தப் போராட்டத்தில் பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் மற்றும் பலர் பங்கேற்றனர். (ஐ)

## முல்லைத்தீவில் சஜித்துக்கு ஆதரவாகச் சுவரொட்டிகள்





முல்லைத்தீவு, ஒக். 01

'புதிய இலங்கைக்கு சஜித்' என்று எழுதப்பட்ட சுவரொட்டிகள் முல்லைத்தீவில் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன.

ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் இலங்கை ஜனாதிபதி வேட்பாளராக அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவாகியுள்ளார்.

இவருக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் சுவரொட்டிகள் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்களினால் முல்லைத்தீவில் ஒட்டப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு நகர், புதுக்குடியிருப்பு நகர் உள்ளிட்ட முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. (ஐ)

# சொந்த நிலத்திலிருந்தே வாக்களிப்பதற்கு முடிவு

## கேப்பாபிலவு மக்கள் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஒக். 01

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சொந்த நிலத்திலிருந்து வாக்களிப்பது என முடிவெடுத்துள்ளதாகக் கேப்பாபிலவு மக்கள் தெரிவித்துள்ளனர்.

இராணுவத்தின் ஆக்கிரமிப்பிலுள்ள காணிகளுக்குச் சொந்தமான கேப்பாபிலவு மக்கள், தமது காணிகளை விடுவிக்குமாறு தொடர் போராட்டத்தை முன்னெடுத்து வரும் நிலையில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடக சந்திப்பிலேயே அவர்கள் இந்த விடயத்தைக் குறிப்பிட்டனர்.

அவர்கள் தெரிவிக்கையில் –

கடந்த 20ஆம் திகதி வடக்கு ஆளுநர் சுரேன் ராகவன் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில்தமது காணிகள் தொடர்பாக ஒரு வாரத்தில் முடிவொன்றைத் தருவதாகக் கூறப்பட்டது. இராணுவத்தினருடனும் கலந்துரையாடி முடிவைக் கூறுவதாக ஆளுநர் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் ஒரு வாரம் முடிவடைந்துள்ள நிலையில், எமக்கான எந்தவொரு முடிவும் தெரிவிக்கப்படவில்லை. தொடர்ந்தும் முடிவுக்காக நாம் காத்திருக்கிறோம்.

அத்துடன் காணிகளை விடுவிக்குமாறு கோரும் நாம் மாற்றுக் காணிகளையோ அல்லது நட்டஈட்டையோ கோரவில்லை. எங்களது சொந்த காணிகளை விடுவிக்கவேண்டும் என்றே கோருகிறோம்.

எதிர்வரும் தேர்தலுக்கு முன்னதாக எமது பிரச்சினைக்குத் தீர்வு தர வேண்டும். தேர்தலில் சொந்த நிலத்திலிருந்தே வாக்களிப்பதற்கு முடிவெடுத்துள்ளோம் – என்றனர். (ஐ)



## பொத்துவில் பிரதேச சபை செயலாளர் உயிரிழப்பு

அம்பாறை – பொத்துவில் பிரதேச சபையின் செயலாளர் தங்கராசா சாயிதாசன், நேற்று முன் தினம் நள்ளிரவு இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்துள்ளாரெனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அக்கரைப்பற்று பிரதேசத்தில் இருந்து திருக்கோவில் பிரதேசத்தை நோக்கி, மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண் டிருந்தபோது, தம்பிலுவில் அம்மன் கோவிலுக்கு அருகாமையில் இடம்பெற்ற விபத்திலேயே இவர் உயிரிழந்துள்ளார். சடலம், திருக்கோவில் ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சிவன் கோவில் வீதி, பனங்காட்டைச் சேர்ந்த 34 வயதுடைய இவர் கடந்த வருடம் நடைபெற்ற நிர்வாக சேவையின் அதியுயர் தரத்துக்கான பரீட்சையில் சித்தியடைந்து பொத்துவில் பிரதேசசபையின் செயலாளராக அண்மையில் நியமிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

விபத்து தொடர்பான விசாரணைகளை, திருக்கோவில் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# போட்டியில் இருந்து விலகுவார் கோட்டா

## கூறுகின்றார் அமைச்சர் ராஜித

கொழும்பு, ஒக். 01

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ அடுத்த வாரம் போட்டியில் இருந்து விலகுவார் என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

மக்கள் சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அமைச்சர் ராஜித சேனாரத்ன இந்தத் தகவலை வெளியிட்டார்.

கோட்டாபயவுக்கு தேசிய அடையாள அட்டைகள் இரண்டு உள்ளன என்றும், இது தொடர்பில் இரகசியப் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றன என்றும் அவர் கூறினார்.



குடியுரிமையை மோசடி செய்து பெற்றுக் கொண்ட நபர் ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாதெனத் தடை உத்தரவு ஒன்று பெறப்படும் என அவர் கூறியுள்ளார். (ஐ)

northern PC Park

கணினி உலகில்
நம்பகமான சேவையில்
10 வருடங்களுக்கு
மேலாக யாழ் மண்ணில்

வடக்கின்
கணினிப் பூங்கா
# 10, Muddaskada Junction
Stanly Road, Jaffna

தரமான கணினிகளைப் பெற்றுக் கொள்ள
நம்மை நாடுங்கள்

www.pcpark.co
info.pcpark.co

Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern Pc Park

0777570124
0773366443
0766999597
0717772377

0215675566
0212229581
0212222050
0212220388



# திமுத் எதிர்காலத்தில் சிறந்த அணியை உருவாக்குவார்!

திமுத் கருணாரத்ன எதிர்காலத்தில்சிறந்தஅணிஒன்றை உருவாக்குவார் என அணியின் முன்னணி வீரரான லஹிரு திரிமன்னே நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

மிகப்பெரிய சர்ச்சைக்கு பிறகு, இலங்கை அணி, பாகிஸ்தானுக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம்மேற்கொண்டுமூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் மற்றும் மூன்று போட்டிகள் கொண்ட ரி – 20 தொடரில் விளையாடுகின்றது.

இந்த நிலையில், இத் தொடரிலிருந்து இலங்கை அணியின்திமுத்கருணாரத்ன உள்ளிட்ட பத்து முன்னணி வீரர்கள், விலகியுள்ளனர். இதனால் ஒருநாள் அணிக்கு லஹிரு திரிமன்னேயும், ரி – 20 அணிக்கு தசுன் சானகவும் தலைமை தாங்குகின்றனர்.

இந்த நிலையில் இந்தச் சுற்றுப்பயணத்தில் முதலாவதாக ஒருநாள் தொடர் நடைபெறுகின்றது. இதற்கிடையில் இச்சுற்றுப்பயணம் குறித்து, அணித்தலைவர் லஹிரு திரிமன்னே கருத்து தெரிவித்துள்ளார். அவர் கூறிய கருத்துக்கள் இவை,

அணித்தலைவராக திமுத் சிறந்தபணிஒன்றைஉருவாக்கி வருகிறார். உலகக் கிண்ண தொடரில்நாம்நன்றாகசெயற்பட்டோம். சில போட்டிகளில் நாம் வெற்றி பெற்றோம். ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் அணி கட்டியெழுப்பப்பட்டு வருவதாக நான் நினைக்கிறேன். திமுத் கருணாரத்ன எதிர்காலத்தில் சிறந்த அணி ஒன்றை உருவாக்குவார் என்று நான் நினைக்கிறேன்.

நியூசிலாந்து அணிக்கெதிரான தொடரில் அஞ்சலோ மெத்யூஸுக்கு காயம் ஏற்பட்டபோது நான் தலைவராக செயற்பட்டிருக்கிறேன். அப்போது உப தலைவராக நான் இருந்தேன். அதனாலேயே நான் தலைவராக பொறுப்பேற்றேன். அணித்தலைவர் என்பதை தலைக்கு எடுத்துக் கொள்ளக் கூடாது.

வீரராக உச்ச திறமையை வெளிப்படுத்துவதே எனது எதிர்பார்ப்பாக உள்ளது. அதே போன்று சிரேஷ்ட வீரர் என்ற வகையில் அணியை ஒன்றாக இணைத்து எதிரணிக்கு சவால் கொடுக்கவே நான் எதிர்பார்க்கிறேன்

சில வீரர்கள் இந்த சுற்றுப் பயணத்தில் இருந்து விலகியமை அது அவர்களது, தனிப்பட்ட முடிவு. எல்லோரும் தமது குடும்பத்தினருடன் சேர்ந்து எடுக்க வேண்டிய முடிவு. சில வீரர்கள் இந்த சுற்றுப்பயணத்தில் பங்கேற்க விரும்பினாலும் அவர்களின் தாய், தந்தையர், குடும்பத்தினர் விரும்பாமல் இருந்தால் இந்த சுற்றுப் பயணத்தில் பங்கேற்க முடியாமல்போகும். பெரும்பாலான வீரர்கள் மறுத்தது இதன் காரணமாகத்தான்

அதற்காகநாம்அவர்களின் முடிவுக்கு மதிப்பு அளிக்க வேண்டும். வந்த வீரர்களிடம் இருந்துஉச்சபலனைபெறவே எதிர்பார்க்க வேண்டும்.

திமுத், மெத்யூஸ் ஆகிய அனைத்து வீரர்களும் இங்கு வருபவர்களை வாழ்த்தினார்கள். இருக்கின்ற அணியை வைத்து உச்ச திறமையை வெளிப்படுத்துமாறு தான் அவர்கள் எம்மிடம் கூறினார்கள் என கூறினார்.

கடந்த 2009ஆம் ஆண்டு பாகிஸ்தான் சுற்றுப்பயணத்தில் இலங்கை அணி வீரர்கள் சென்ற பேருந்து மீது துப்பாக்கிதாரிகள் நடத்திய தாக்குதலில் ஆறு வீரர்கள் காயமடைந்தனர். இந்த சம்பவத்தில் ஆறு பாகிஸ்தான் பொலிஸார் மற்றும் இரண்டு பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

இதனால், பாகிஸ்தானிற்குச் சென்று விளையாட சர்வதேச அணிகள் தயக்கம் காட்டின. எனினும்சர்வதேசஅணிகளை வரவழைத்து பாகிஸ்தான் மண்ணில்விளையாடவைக்க, பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கடுமையான முயற்சிகளை மேற்கொண்டது.

இவ்வாறான கடுமையான முயற்சிகளை பாகிஸ்தான் மேற்கொண்ட போதும், பாகிஸ்தான் மீது நம்பிக்கையில்லாத சர்வதேச அணிகள், அங்கு சென்று விளையாட, தொடர்ந்தும் தயக்கம் காட்டின.

ஆனால், உலகளவில் தனிமைப்படுத்தப்பட்ட பாகிஸ்தானுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் தற்போது பாகிஸ்தான் சென்று, இலங்கை அணி விளையாடுகின்றது.


# சென்னை அணியை சுத்தமாக பிடிக்காது

தடை நீக்கம் பெற்று விரைவில் கிரிக்கெட் போட்டிகளில்கலந்துகொள்ள இருக்கும் வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரீசாந்த் தனக்கு சென்னை அணியை பிடிக்காது எனக் கூறியுள்ளார்.

இந்திய அணியில்நட்சத்திர வீரராக வலம்வந்த வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரீசாந்த், 2013ம் ஆண்டு ராஜஸ்தான் அணி சார்பில் விளையாடிய போட்டியின்போதுசூதாட்டத்தில் ஈடுபட்டதாக புகார் எழுந்தது.

இதனையடுத்து அவருக்கு தடை விதித்து இந்தியகிரிக்கெட்சபைநடவடிக்கை மேற்கொண்டது. இதனால் கிரிக்கெட் விளையாடாமல் இருந்த ஸ்ரீசாந்தின் இடைநீக்கம் திருத்தப்பட்டு 7 ஆண்டுகளாக குறைக்கப்படவேண்டும் என்றும், அவர் அடுத்த ஆண்டு முதல் கிரிக்கெட் விளையாடலாம் என்றும் கிரிக்கெட் சபையின் நன்னடத்தை அதிகாரியான முன்னாள் நீதிபதி ஜெயின் உத்தரவு பிறப்பித்தார்.

இந்த நிலையில் இணையதளம் ஒன்றிற்குப் பேட்டியளித்துள்ள ஸ்ரீசாந்த், நான் சென்னை அணியை எந்த அளவிற்கு வெறுக்கிறேன் என்பது அனைவருக்குமே தெரியும். அதைப்பற்றி நான் சொல்ல வேண்டியதில்லை.



அதற்குகாரணம்எம்.எஸ். டோனி அல்லது என் சீனிவாசன் அல்லது வேறு எதையாவது மக்கள் கூறுவார்கள். ஆனால் அது உண்மை இல்லை; நான் மஞ்சள் நிறத்தை வெறுக்கிறேன். அதே காரணத்திற்காக நான் ஆஸ்திரேலியாவை வெறுத்தேன்.

மிக முக்கியமாக நான் சென்னை அணிக்கு எதிராக நன்றாக விளையாடியிருக்கிறேன். அதற்காகவே நான் மீண்டும் விளையாட விரும்புகிறேன் எனக்கூறியுள்ளார்.

# ரவி சாஸ்திரியின் பதவிக்கு ஆபத்தா?

இந்தியகிரிக்கெட்அணியின் தலைமை பயிற்சியாளர் ரவி சாஸ்திரியின் பதவிக்கு ஆபத்தா எனக் கேள்வியெழுந்தநிலையில் அது தொடர்பில் விளக்கமளிக்கப் பட்டுள்ளது.

இந்தியகிரிக்கெட்ஆலோசனைக்குழுவில் உள்ள கபில் தேவ், அன்ஷுமான் கெய்க்வாட் மற்றும் சாந்தா ரங்கசாமிக்கு இரட்டை ஆதாயப்பதவி தொடர்பான நோட்டீஸ் அனுப்பப்பட்டது.

அதனால் அவர்களால் நியமிக்கப்பட்ட தலைமைப் பயிற்சியாளர் ரவி சாஸ்திரியின் பதவிக்கு ஆபத்து ஏற்படுமா என்று இந்திய கிரிக்கெட் நிர்வாகக்குழு தலைவர் வினோத் ராயிடம் கேட்கப்பட்டது.

அதற்கு பதிலளித்த வினோத் ராய், ரவி சாஸ்திரியின் பதவிக்கு ஆபத்தெல்லாம் ஒன்றுமே இல்லை.

கிரிக்கெட் ஆலோசனைக்குழு உறுப்பினர்களிடம் இரட்டை ஆதாய பதவி தொடர்பான ஆவணங்கள் பெறப்பட்டுத்தான் நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் இரட்டைஆதாயப்பதவியில் இருக்கிறார்கள் என இந்தியக் கிரிக் கெட் சபை கருதவில்லை. அதன்பின்னர்தான்அவர்கள்நியமிக்கப்பட்டு, பயிற்சி யாளரைத் தேர்வு செய்யஅனுமதிக்கப்பட்டனர்.

அதுமட்டுமல்லாமல் கிரிக் கெட் ஆலோசனைக் குழுவின் ஒரே பணி தலைமை பயிற்சியாளரை தேர்வு செய்வதுதான்.

முறையாக அந்த பணி மேற்கொள்ளப்பட்டு ரவி சாஸ்திரி தலைமை பயிற்சியாளராகியுள்ளார் என கூறியுள்ளார்.

# கோஹ்லி தைரியமாக முடிவுகளை எடுக்கிறார்!

இந்திய கிரிக்கெட் அணித்தலைவர் விராட் கோஹ்லி தைரியமாக முடிவுகளை எடுப்பதாக, முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் சகீர்கான் தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் கங்குலி மற்றும் தற்போதைய அணித்தலைவர் கோஹ்லி ஆகியோரை ஒப்பிட்டு, இந்திய அணியின் முன்னாள் வீரர் சகீர் கான் கருத்து தெரிவித்துள்ளார்.

வேகப்பந்து வீச்சாளரான அவர் கூறுகையில், 'தற்போதைய இந்திய கிரிக்கெட் அணியில் இடம்பெற்றுள்ள வேகப்பந்து வீச்சாளர்கள் சிறப்பாக செயல்படுவது மகிழ்ச்சி அளிக்கிறது. பும்ரா, முகமது ஷமி, இஷாந்த் ஷர்மா, புவனேஷ்வர் குமார், நவ்தீப் சைனி உள்ளிட்ட வீரர்கள் இந்தியகிரிக்கெட்அணியின் வேகப்பந்து வீச்சு அசுர பலம் கொண்டு இருக்கின்றமையை உலகுக்கு நிரூபித்து வருகிறார்கள்.

வெளிநாட்டு மண்ணில் நமது அணியால் வெல்ல முடியும் என்ற நம்பிக்கையை சவுரவ் கங்குலி ஏற்படுத்தினார். களத்தில் அவரது ஆக்ரோஷமான செயல்பாடு நம்மை கவர்ந்து, அதனைப் பின்பற்ற வழி வகுத்தது.

விராட் கோஹ்லி நிறைய விடயங்களில் முன்னாள் அணித்தலைவர் கங்குலியைப் போல் செயல்படுகிறார். ஆக்ரோஷமாக செயல்படக் கூடிய அவர், முடிவுகளை தைரியமாக எடுத்து வருகிறார். நெருக்கடியான நிலையிலும் கூட விராட் கோஹ் அணிக்கு உத்வேகம் அளிக்கும் வகையில் செயல்படுகிறார்.

அத்துடன் அவருடைய துடுப்பாட்ட திறமை அணியை வழிநடத்துவதில் பிரதிபலிக்கிறது. அவர் ஒருநாளில் நமக்கு உலகக்கிண்ணத்தை வென்று தருவதை பார்க்க விரும்புகிறேன்' என தெரிவித்துள்ளார்.



# காலிறுதிக்குள் நுழைந்தது அளம்பில் இளந்தென்றல்

சிலாவத்தை இளம்பறவை வி.க மாகாண ரீதியாக நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில்தாழ்வுப்பாடுசென்.அன்ரனீஸ்அணியை எதிர்த்து அளம்பில் இளந்தென்றல் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் தலா ஒரு கோலை பெற்றமையால் வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் இளந்தென்றல் அணி 04 : 02 கோல் அடிப்படையில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.



# தாக்குதலில் ஒருவர் சாவு



கொழும்பு, ஒக். 01

கொக்கரெல்ல, மெல்சிறிபுர பிரதேசத்தில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு நபர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

பிரதேசத்தில் கட்டப்பட்டு வரும் கட்டடமொன்றில் பணி புரிந்த ஊழியர்கள் இருவருக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக இந்தக் கொலை இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலில் படுகாயமடைந்த மாவத்தகம பகுதியைச் சேர்ந்த 41 வயதுடைய நபர், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார், சந்தேகநபரை கைதுசெய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். (ஐ)

# கோட்டாவையே நான் ஆதரிப்பேன்

## நிமல் சிறிபால டி சில்வா உறுதி

**கொழும்பு, ஒக். 01**

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எந்த முடிவை எடுத்தாலும், பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கே நான் ஆதரவு வழங்குவேன். – என்று சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.**



பதுளை மாவட்ட பொதுஜன பெரமுன கட்சி செயற்பாட்டாளர்கள் மத்தியில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் பொதுஜன பெரமுனவுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்பாட்டுக்குச் சில நாடாளுமன்ற உறுப்பினர்களே தடையாக இருக்கின்றனர்.

சுதந்திரக் கட்சியின் 5 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏற்கனவே சஜித் பிரேமதாஸவைச் சந்தித்துள்ளனர். அவருக்கு ஆதரவு தெரிவிக்கவும் தயாராக உள்ளனர்.

சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் என்ற வகையில் நான் அவ்வாறு செய்யமாட்டேன் – என்றார். (ஐ)

# தொண்டமானின் ஆதரவு சஜித்துக்கு தேவையில்லை

## வேலுகுமார் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 01

மலையகத் தமிழர்களின் அமோக ஆதரவைப் பெற்ற அரசியல் கூட்டணியாக தமிழ் முற்போக்குக் கூட்டணி விஸ்வரூபமெடுத்துள்ளது. எனவே, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவு வழங்காவிட்டால்கூட மக்கள் சஜித்துக்கே வாக்களித்து அவரை நிச்சயம் அரியணையேறவைப்பார்கள்.

– இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், இந்து சமய விவகார அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

கண்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு: –

நாட்டில் எந்த மூலை முடுக்குக்குச் சென்றாலும் திரும்பும் திசையெல்லாம் 'சஜித் வந்துவிட்டார், வெற்றி நிச்சயம்' என்ற மக்கள் ஆதரவு குரலே ஓங்கி ஒலித்துக்கொண்டிருக்கின்றது.

இவ்வாறு சஜித்துக்கு ஆதரவாக உருவாகியுள்ள பேரலைகளை எவ்வாறு சமாளிப்பது என தெரியாமல் ராஜபக்ஷாக்களும் அவர்களின் சகாக்களும் திக்குமுக்காடிப்போய் உள்ளனர்.

அதுமட்டுமல்ல ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேறிய பலரும் சஜித்தின் கரங்களை மேலும் பலப்படுத்துவதற்காக மீண்டும் தாய்வீடு திரும்பி வருகின்றனர்.

இன்னும் சில நாள்களில் மஹிந்தவின் முகாமிலிருந்தும் சஜித்துக்கு ஆதரவான படையணியொன்று வெளிக்கிளம்பவுள்ளது. எனவே, இனிவரும் நாள்களில் தரமான மற்றும் சிறப்பான அரசியல் சம்பவங்கள் அரங்கேறவுள்ளன.

மறுபுறத்தில் தோல்விபீதியால் கதிகலங்கிபோயுள்ள மொட்டு கட்சிக்காரர்கள் வழமைபோல் இனவாத ஆயுதத்தை கையிலேந்தி – சிங்கள, பௌத்த மக்களைத்திசைதிருப்பிவாக்குவேட்டைநடத்துவதற்குத் தயாராகி வருகின்றனர்.



ஆனால், இம்முறை இந்த குறுக்கு வழி அரசியல் யுக்தியும் வெற்றிபெறாது என்பதை மொட்டுக்கட்சிக்காரர்களுக்கு கூறி வைக்கவிரும்புகின்றேன்.

அதேவேளை, மலையகத்தில் பருவகால அரசியலுக்கு பேர்போன இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் இரட்டை நிலைப்பாட்டை கடைபிடித்துவருவதை அக்கட்சி உறுப்பினர்களால் விடுக்கப்படும் அறிக்கைகள்மூலம் தெளிவாகின்றது.

ஒக்ரோபர் அரசியல் சூழ்ச்சியின்போது மஹிந்தவிடம் தஞ்சமடைந்து அமைச்சுப் பதவியை வாங்கிய ஆறுமுகன் தொண்டமானுக்கு தற்போது கோட்டாவுக்குத்தான் ஆதரவு என்பதை பகிரங்கமாக அறிவிப்பதற்கு ஏன் முடியாதுள்ளது.

அதுதான் இ.தொ.காவின் சந்தர்ப்பவாத அரசியலாகும்.

இன்று மலையக தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகளாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் உறுப்பினர்களே செயற்படுகின்றனர். மக்களின் ஆதரவும் எமக்கே முழுமையாக இருக்கின்றது.

எனவே, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் வருகைக்காக செங்கம்பளம் விரிந்து, மலர் செண்டுடன் காத்திருக்கவேண்டிய தேவைப்பாடு ஐக்கிய தேசிய முன்னணிக்கு கிடையாது. இ.தொ.காவினர் கோட்டாபய ராஜபக்ஷவை ஆதரித்தால்கூட அது சஜித்தின் வெற்றியில் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை – என்றார். (ஐ)

# மேலும் 5,000 மாணவருக்கு புலமைப்பரிசில் நிதி உதவி

கொழும்பு, ஒக். 01

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில், வெட்டுப் புள்ளிக்கு மேலதிகமாக புள்ளிகளைப் பெற்ற மேலும் 5,000 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் நிதி வழங்க, அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

11 வருடங்களுக்கு பின்னரே, புலமைப்பரிசில் நிதி உதவிப் பெறும் மாணவர்களின் எண்ணிக்கை இவ்வாறு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதுவரைக் காலம், 15,000 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் நிதி வழங்கப்பட்டு வந்ததுடன், தற்போது புதிதாக 5,000 மாணவர்களுக்கு நிதியுதவி வழங்குவது தொடர்பில், கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்துக்கமைய புலமைப்பரிசில் நிதி உதவிப் பெறும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 20,000 வரை அதிகரித்துள்ளது. (ஐ)






# முஸ்லிம்கள் அபிவிருத்தியை விட நிம்மதியையே எதிர்பார்க்கின்றனர்!

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 01

அபிவிருத்தியை விட நிம்மதியான வாழ்க்கையையே இன்று முஸ்லிம் சமூகம் எதிர்பார்க்கின்றது. சீர்குலைந்துள்ள இயல்பு வாழ்க்கையை மீட்டிக்கொள்வதற்கான தருணமாகவே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை நாங்கள் எதிர்கொள்ள வேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

குருநாகல் மாவட்டத்தில் காபட் வீதியாக அபிவிருத்தி செய்யப்பட்ட பன்னவ சந்தி – லோலன்வெவ வரையிலான வீதி மற்றும் பன்னவ கிராமிய குடிதண்ணீர் திட்டம் ஆகியவற்றை மக்கள் பாவனைக்காக திறந்துவைத்த பின்னர் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவிக்கையில் –

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எங்களது தெரிவு தொடர்பில் குழப்பங்கள் இருந்தால், எமது தீர்மானம் எந்த விவகாரங்களை அடிப்படையாகக் கொண்டது என்று ஆராயவேண்டும். அந்தத் தெரிவு முஸ்லிம்களைப் பொறுத்தவரை தனி நபர்களைப் பொறுத்த விடயமல்ல. சமூகம் சார்ந்த முடிவுகளையே நாங்கள் எடுத்தாக வேண்டியிருக்கிறது.

முஸ்லிம் சமூகத்தை நாட்டிலுள்ள ஏனைய சமூகங்கள் அச்சத்தோடும் சந்தேகத்தோடும் பார்க்கின்ற ஒரு நிலைவரத்தை உருவாக்குவதற்குச் சில சக்திகள் திட்டமிட்டுச் செயற்பட்டன. இதன் விளைவாக நாங்கள் பெரும் நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்க நேரிட்டது. இனியும் இந்தமாதிரியான நெருக்கடிகள் வரமாட்டா என்பதற்கு எங்களுக்கு எவ்வித உத்தரவாதங்களும் இல்லை. இப்படியானதொரு சூழலில்தான் நாங்கள் தீர்மானமிக்க இன்னுமொரு தேர்தலுக்கு முகம்கொடுக்கவுள்ளோம்.

ஏப்ரல் 21ஆம் திகதி நடந்த பேரபாத்துதான் எங்களது மனதில் நிலைத்திருக்கும். அதேமாதிரியான ஒரு பயங்கரவாதத்தையே ஒக்ரோபர் 26ஆம் திகதி இந்த நாட்டில் நடத்தினார்கள். அதுவும் ஒருவிதமான பயங்கரவாதம்தான். அதில் உயிர்கள் கொலை செய்யப்படுகின்றமை ஒருபுறமிருக்க, நாட்டின் ஜனநாயகம் கொலை செய்யப்பட்டது. இப்படியான அட்டகாசங்கள் நடந்தமையை நாங்கள் மறந்துவிட முடியாது.

நான் 25 வருடங்களாக நாடாளுமன்றத்தில் இருக்கின்றேன். சட்டவிரோதமாக ஆட்சியைக் கைப்பற்ற நினைத்தவர்கள் நடத்திய அட்டகாசத்தை நான் வேறெந்த நாளும் கண்டதில்லை. நாடாளுமன்றத்தில் அடிக்கடி ஏதாவது சர்ச்சைகள் நடந்தாலும், இப்படியொரு ஜனநாயக மீறல் அட்டூழியம் நிகழ்ந்ததை யாரும் பார்க்கவில்லை.

நாட்டின் நீதித்துறை சுயாதீனமாக இருந்த காரணத்தினால் நாங்கள் எல்லோரும் தைரியமாக வாதாடி, சட்டவிரோத ஆட்சியை முடிவுக்கு கொண்டுவந்தோம். பதவியிலிருக்கும் ஜனாதிபதியின் தற்துணிவைப் பாவித்து, பின்கதவால் ஆட்சியை பறிக்க வந்தவர்கள், இப்போது முன்கதவால் ஆட்சியைத் தாருங்கள் என்று உங்கள் முன் வந்திருக்கிறார்கள். இவர்களை நாங்கள் தெளிவாக அடையாளம்காண வேண்டும்.

இந்த அரசு செய்தது போதாது. அரசின் மீதான குற்றச்சாட்டுகள், ஊழல்கள் என்று பல கதைகள் வந்தாலும், எல்லாவற்றையும்விட மிக முக்கியமாக இருப்பது நாட்டின் பாதுகாப்பு. இதைத்தான் எல்லோரும் தேர்தலில் தூக்கிப் பிடிப்பார்கள். பயங்கரவாதத்தை இனி தலைதூக்க விடமாட்டோம். எல்லோரும் புதர்களுக்குப் பின்னாலும் பிசாசைப் பார்ப்பதுபோல் மாறிவிட்டது. அதிலும் முஸ்லிம் சமூகத்துக்குள்தான் ஒளிந்து கொண்டிருக்கிறது என்று நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த பயங்கரவாத கும்பலை கூலிக்கமர்த்திய சக்திகள் யார் என்பதையும் நாங்கள் அடையாளம் காணவேண்டும். இது வெளியிலிருந்து கூலிக்கு அமர்த்தப்பட்ட ஒரு கும்பல். இதற்கும் எங்களுக்கும் சம்பந்தமில்லை. ஆனால், நாங்கள் எங்களுக்குள் ஒரு சுயவிமர்சனம் செய்து இனிமேல் இதுபோன்ற விடயங்கள் நடக்காமல் பார்த்துக்கொள்வதற்கு மற்றவர்களைவிட நாங்கள் உசாராக இருக்க வேண்டும்.

இப்படியான சூழலில் எங்களுடைய வேட்பாளர் தெரிவில் நாங்கள் தெளிவாக இருக்கவேண்டும். எங்களால் மட்டும்தான் ஒழுக்கத்தையும், புதுவிதமான அரசியல் கலாசாரத்தையும் உருவாக்க முடியும். நாங்கள்தான் எல்லாவற்றையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவோம் என்று சொலிக்கொண்டுதிரிகின்ற ஆள்களினால் அவற்றை செய்ய முடியாது. நாங்கள் பீதியும் பயமும் உள்ளதொரு வாழ்க்கைக்கு மீண்டும் செல்லமுடியாது.

தற்போதைய அரசிலும் எங்களுக்கு பெரியதொரு நிம்மதி இருக்கவில்லை என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அளுத்கம, பேருவளை சம்பவங்களை காரணம்காட்டி அரசை மாற்றினோம். ஆனால், திகன, கண்டி, அம்பாறை, குருநாகல், புத்தளம் போன்ற இடங்களில் அடி வாங்கினோம். இந்த அரசாங்கம் தொடர்பில் திருப்திப்படுவதற்கு எங்களுக்கு எந்த விடயங்களும் இல்லை.

எங்களது அமைச்சர்கள் எல்லோருமாக ஒட்டுமொத்தமாக இராஜினாமா செய்துதான், எங்களுக்கு எதிரான அர்த்தமில்லாத பழிகளை ஓரளவுக்குச் சமாளித்தோம். எங்களுக்கெதிராக மீண்டும் வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுவதற்கு தருணம் பார்த்துக்கொண்டிருந்த இனவாதிகளிடமிருந்து எமது சமூகத்தைக் காப்பாற்றுவதற்காகவே நாங்கள் கூட்டாக பதவிகளைத் துறந்தோம்.

எங்களுக்கு இந்த அரசிலிருந்த நம்பிக்கை போய்விட்டது. ஆனால், ஒரு குழுவாக இருந்து சமூகத்தின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கு நிறைய படிப்பினையை நாங்கள் படித்திருக்கிறோம். இவ்வளவு அராஜகம் செய்த கும்பல் இப்போது எந்த தரப்பிலிருக்கிறது என்று பாருங்கள். நீங்கள் இதையெல்லாம் அலசி ஆராய்ந்த பின்னர்தான் தீர்க்கமான ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

முன்னைய யுகங்களைவிட பல மடங்கு துன்பங்களை நாங்கள் அனுபவித்திருக்கிறோம். ஆனால், கடந்த ஒரு வருட காலமாக அனுபவித்த கஷ்டங்களுக்குப் பின்னாலிருக்கும் சக்திகள் ஆட்சிமாற்றத்தை கொண்டுவருவதற்கு திட்டம் போட்டுச் செய்த சதிகளில் நாங்கள் எல்லோரும் மாட்டிக்கொண்டோம்.

சமூகத்துக்கு இதுவரை காலமும் இருந்து வந்த சுதந்திரங்களை பறிக்கவேண்டும் என்ற நோக்கில் இப்போது மீண்டும் பேசத் தொடங்கிவிட்டார்கள். ஒரு நாட்டுக்குள் ஒரே சட்டம்தான் இருக்க வேண்டும் என்று பேசுகின்றனர். வேட்பாளர்கள் இப்படியான பிரசாரங்களையே முன்னெடுத்து வருகின்றனர். இவற்றை முறியடிப்பதற்கு எங்கள் மத்தியில் ஒற்றுமை இருக்கவேண்டும். எங்களுடைய வாக்குகளை ஒன்றுதிரட்டி இவர்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும் – என்றார்.

# கோட்டாவின் குடியுரிமையை சவாலுக்கு உட்படுத்தும் மனு நாளை விசாரணை

கொழும்பு, ஒக். 01

கோட்டாபய ராஜபக்ஷவின் இலங்கைக் குடியுரிமையின் செல்லுபடித்தன்மையைச் சவாலுக்குட்படுத்தும் நீதிப் பேராணை மனுவை விசாரிக்க நீதியரசர்கள் மூவர் கொண்ட அமர்வு நியமிக்கப்பட்டுள்ளது.

அந்த அமர்வு முன்னிலையில் மனு நாளை புதன்கிழமை முற்பகல் 9.30 மணி மறுநாள் வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு தொடர் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்தது.

நவம்பர் 16ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலில் முக்கிய போட்டியாளர்களில் ஒருவராகக் கருதப்படும் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு இலங்கைக் குடியுரிமை எப்போதாவது சட்டபூர்வமாக வழங்கப்பட்டதா என்பது பற்றிய கேள்விகளை எழுப்பும் வகையில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், கோட்டாபய ராஜபக்ஷ ஒரு இலங்கைக் குடிமகன் என்று கூறுவதைத் தடுக்கும் வகையில், இடைக்கால உத்தரவைப் பிறப்பிக்குமாறும் மனுவில் கோரப்பட்டுள்ளது.

இந்த மனுவை சிவில் செயற்பாட்டாளர்களான காமினி வியாங்கொட, பேராசிரியர் சந்ரகுப்த தெனுவர ஆகியோர் தாக்கல் செய்துள்ளனர்.

கோட்டாபய ராஜபக்ஷ இலங்கையின் குடிமகன் அல்லர் என்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என புரவெசி பலய அமைப்பின் அமைப்பாளர், காமினி வியாங்கொட தெரிவித்துள்ளார்.

எங்களை ஆள விரும்புவோர், சட்டத்தின் ஆட்சியை எவ்வாறு நிலைநிறுத்துவது என்பதற்கு முழு நாட்டிற்கும் ஒரு முன்மாதிரியானவராக இருக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம் என்றும் வியாங்கொட தெரிவித்தார். (ஐ)

# ஜோன்ஸ்டன் மீண்டும் ஐ.தே.கவில்?

கொழும்பு, ஒக. 01

ஐக்கியதேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாஸ அறிவிக்கப்பட்டமையை அடுத்து ஐக் கி ய தேசியக் கட்சியிலிருந்து விலகியிருந்த சிலர் மீண் டும் கட்சியில் இணைவதற்கான கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

சஜித் பிரேமதாஸவின் வேண்டுகோளுக்கிணங்க ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க ஜனாதிபதித் தேர்தலில் சஜித் துக்கு ஆதரவளிப்பதாகப் பகிரங்கமாக அறிவித்திருந் தார்.

இதேவேளை அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சிப் பிரதிநிதிகளுடன் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் வாசுதேவ நாணயக்கார ஆகியோர் பேச்சு நடத்தியுள்ளனர் என அரசியல் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வாசுதேவ நாணயக்கார கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக இருந்தவர் என்பதுடன் பின்னர் அவருக்கு ஆதரவளித்திருந்தாலும் கோட்டாபயவுக்கு எதிரான அவரது கருத்தில் மாற்றமில்லை என தெரிவிக்கப்படு கிறது.

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினராக இருந்ததுடன் ஐக்கிய தேசியக் கட்சியைப் போன்று மஹிந்த ராஜபக்ஷ சார்பிலும் பெறுமதியான வாக்குகள் அவருக்கு கிடைப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. இதனால் அவர் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி கூடுதல் கவனம் செலுத்தியுள்ளது.

அதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிகளில் இருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகிய பிரபல உறுப் பினர்கள் தொடர்பிலும் ஐக்கிய தேசியக் கட்சி கவனம் செலுத்தியுள்ளது.

எவ்வாறாயினும் எதிர்வரும் தினங்களில் எதிர்பாராத விதத்தில் பல மாற்றங்கள் இடம்பெறும் என அரசியல் உள்ளக தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளமை குறிப் பிடத்தக்கது. (ஐ)

# தமது கைகளிலுள்ள ஆயுதத்தை முஸ்லிம்கள் பக்குவமாகப் பாவிக்கத் தயாராக வேண்டும்!

## கிழக்கு முன்னாள் முதலமைச்சர் நஸிர் அஹமட்

கொழும்பு, ஒக். 01

'முஸ்லிம்கள் தமது கைகளிலுள்ள ஆயுதத்தை மிகவும் பக்குவமாகபாவித்தாகவேண்டும்.எதுவித ஆதார முமின்றி முஸ்லிம்கள் என்ற காரணத்துக்காக வேண்டும் மென்றே பிரச்சினைகளை தோற்றுவிக்கின்ற செயற் பாடுகள் தொடர்ந்தும் அரங்கேறி வருகின்ற நிலையில் முஸ்லிம்கள் தமது வாக்குரிமை என்ற ஆயுதத்தை மிகவும் கவனமாகப் பாவிக்க வேண்டும்.'

– இவ்வாறுதெரிவிக்கின்றார் கிழக்கு மாகாண முன் னாள் முதலமைச்சர் நஸிர் அஹமட்.

ஜனாதிபதிதேர்தல்கள் களநிலைமைகள் குறித்து அவர் கருத்துரைத்தபோதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எதிர்வரும் நவம்பர் மாதம் 16 ஆம்திகதி ஜனாதிபதி தேர்தல் நடைபெறுமெனஅறிவிக்கப்பட்டுள்ள நிலையில், வேட்பாளர்கள் களஇறங்களும் கருத்தோட்டங் களும் நம்மை கிலியடைச் செய்கின்றன. சிறுபான்மை மக்களின் ஆதரவை பெற்றுக் கொள்ள எடுக்கப்படும் முயற்சிகள் ஒருபக்கம் நடைபெற்றுவரும் அதேவேளை அவ்வாறு கிடைக்கப் பெறாத பட்சத்தில் சிங்களப் பெரு பான்மைச்சமூகத்தின் மிகக்கூடுதலான ஆதரவைப் பெறுவதுதொடர்பிலும் அதிககவனம் செலுத்தப்படு கின்றது.

இதன் காரணமாகச் சிறுபான்மை மக்கள் பற்றிய தவறான பரப்புரைகள் மேற்கொள் எப்படும் ஆபத்தும் எழுந்துள்ளது. குறிப்பாக முஸ்லிம்களின் சமூக அரசியல் மதத் தலைவர்களை மையப்படுத்தி உண்மைக்கு மாறான கருத்துப் பகிர்வுகளை சிங்கள பெரும்பான்மை மக்கள் மத்தியில் விதைக்கும் நடவடிக்கைகளும் முன்னெ டுக்கப்பட்டு வருகின்றன.

இத்தகைய பரப்புரைகளுக்கு உந்துகோலாகப் பெரும்பான்மை இனத்தைச் சார்ந்த சில ஊடகச் சக்தி களும் செயற்படுகின்றன.இவை நாட்டின் தேர்தல் ஒழுங்கு விதிமுறைகளை மீறும் விதமாக அமையப் பெற்றால் தேர்தலுக்குப் பொறுப்பான சுயாதீன ஆணைக்குழு



ஊடாக நாம் நடவடிக்கை எடுக்க தயங்கக் கூடாது.

நாட்டின் இறைமைக்கும் ஐக்கியத்துக்கும் சமாதானத் துக்கும் மற்றும் நல்லிணக்கத்துக்கும் இத்தகைய நடை முறைகள் பெரும் பாதிப்பைஏற்படுத்தும் இதுமட்டுமின்றி சிறுபான்மை மக்களின் அரசியல் மற்றும் வாழ்வாதார நிலைகளுக்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்தும். எனவே இவ்வாறான நிலைமைகள் உருவாக நாம் ஒரு போதும் இடமளிக்கக் கூடாது.

தற்போதைய நிலையில் இந்த ஜனாதிபதி தேர்தலில் எமது வாக்காயுதத்தை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதை நாம் நன்கு சிந்தித்துச் செயற்படுபவர்களாக இருக்க வேண்டியது அவசியமாகின்றது. எமது சமூகத் தின் எதிர்கால இருப்பையும் வனப்பையும் மனதில் கொண்டு நாம் காத்திரமான முடிவோடு எமது ஆதரவை வழங்க முன்வர வேண்டும்.

இதுவிடயத்தில் நமது அரசியல், சமூக, மத சக்திகள் ஒன் றிணைந்து காத்திரமான முடிவொன்றை முன்வைத்து சமூகத்தைச் சிறந்த பாதையில் வழி நடத்த முன்வர வேண்டும். இத்தகைய நடைமுறைக்கு ஆத ரவளித்து எமது ஐக்கியத்தையும் ஒற்றுமையையும் கடைக்கொள்ள எமது மக்கள் தயாராகவேண்டும். – என்றார். (ஐ)

## ஜனாதிபதி ஆணைக்குழுவில் மக்களும் தகவல்களை வழங்குவதற்கு சந்தர்ப்பம்

கொழும்பு, ஒக். 01

உயிர்த்த ஞாயிறு தொடர் குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு பொதுமக்களும் தகவல்களை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கொழும்பு – 7, முதலாம் மாடி, இலக்கம் – 5, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம் என்ற முகவரிக்கு, பதிவு தபால் ஊடாக தங்களது வாக்குமூலங்களை பொதுமக்கள் அனுப்பி வைக்கமுடியுமென ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 14ஆம் திகதிக்குள் பதில் தபால்களை பொதுமக்கள் அனுப்ப விரும்பினால் அனுப்பலாம் எனவும் ஆணைக்குழு கால அவகாசம் வழங்கி யுள்ளது.

இவ்வாறு பொதுமக்களினால் வழங்கப்படும் தகவல்களை மதிப்பீடு செய்து, தொடர் குண்டுத் தாக்குதல் விவகாரத்தில் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக ஆணைக்குழு தெரிவித் துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தொடர் குண்டுத் தாக்குத லில் 250பேர் உயிரிழந்தமையுடன் 350க்கும் மேற் பட்டோர் படுகாயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

## பிரிட்டன் குடியுரிமையைத் துறந்து நாகானந்த தேர்தலில் களமிறக்கம்!

கொழும்பு, ஒக். 01

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தாமும் போட்டியிடவுள்ளார் என அறிவித்துள்ள, சட்டத் தரணி நாகானந்த கொடித்துவக்கு, அதற்காக பிரிட்டன் குடியுரிமையை இரத்துச் செய்துள்ளார் எனவும் தெரிவித்தார்.

கடந்த 20ஆம் திகதி தனது பிரிட்டன் குடிஉரிமை இரத்தாகியுள்ளதாக சட்டத்தரணி நாகானந்த கொடித்துவக்கு கூறினார்.

இதுவரையில் நாட்டிற்கு ஏற்பட்டுள்ள பெரும் அழிவில் இருந்து நாட்டைக் கட்டியெழுப்புவது மாற்று அமைப்புகளின் பொறுப்பாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

## வவுனியாவில் கட்டாக்காலி நாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த சிகிச்சை



வவுனியா மாவட்டத்தில் அதிகரித் துச் செல்லும் கட்டாக்காலி நாய்களின் இனப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வவுனியா பிராந்திய சுகாதார சேவை கள் பணிமனையினர் வவுனியா நகரசபையினருடன் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வரு கின்றனர்.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக நேற்று வவுனியா நகரப்பகுதியில் திரியும் கட்டாக்காலி நாய்களை வாக னம் ஒன்றின் மூலம் ஏற்றி வவுனியா நகரசபையின் வாகனத் தரிப்பிடத்தில் நாய்களுக்கு குடும்பக் கட்டுப்பாடு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டன.

வவுனியா நகரசபையின் பொது சுகாதார பரிசோதகர் சிவராமலிங்கம் கிரிதரன் மேற்பார்வை யின் கீழ் இவ் செயற்றிட்டம் இடம்பெற்று வருகின் றது.

இதன் போது இருபதுக்கு மேற் பட்ட கட்டாக்காலி நாய்களுக்கு இனப்



பெருக்கக் கட்டுப்பாடு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத் தக்கது

## நாய்களுக்கான விசர் நோய் தடுப்பூசி நாவாந்துறையில் இன்று முதல்

யாழ்ப்பாணம், செப். 01

யாழ் மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள யாழ்நகர், பொது சுகா தாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி (AVR) கீழ்வரும் இடங்களில் வைத்து வழங்கப்பட வுள்ளது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்க ளுக்கு மேற்படி தடுப்பு ஊசியை ஏற் றிக் கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

வளர்ப்பு நாய்களுக்கான உரிமக் கட் டணமாக 30 ரூபா செலுத்தப்பட வேண் டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்த வகையில் இன்று 1 ஆம் திகதி –

* 9.00 மணி முதல் 11.00 வரை – பழம் வீதி ஆறுகால்மடம்.
* 11.00 முதல் 1.00 வரை – சனசமூக நிலையம் ஆறுகால்மடம்
* 2.30 முதல் 4.00 வரை – செழியன் வீதி.

நாளை 02 ஆம் திகதி –

* 9.00 மணி முதல் 11.00 வரை – புதிய குடியிருப்பு சனசமூக நிலையம்.
* 11.00 முதல் 1.00 வரை – அராலி வீதி மானிப்பாய் ஒட்டுமடம்.
* 2.30 முதல் 4.00 வரை – R.C. பாடசாலையடி நாவலர் வீதி.

எதிர்வரும் 03 ஆம் திகதி –

* 9.00 மணி முதல் 11.00 வரை – ஆசாத் வீதி.
* 11.00 முதல் 1.00 வரை – 1 ஆம், 2 ஆம், 3ஆம் குறுக்குத்தெரு நாவலர் வீதி
* 2.30 முதல் 4.00 வரை – சேமக் காலை வீதி கெனடி வீதி.

எதிர்வரும் 04 ஆம் திகதி –

* 9.00 மணி முதல் 11.00 வரை – ஜின்னா வீதி
* 11.00 முதல் 1.00 வரை – சனசமூக நிலையம் வசந்தபுரம்.
* 2.30 முதல் 4.00 வரை –சனசமூக நிலையம் நித்திய ஒளி

# மன்னாரில் சைவ எழுச்சி மாநாடு



மன்னார், ஒக்.01

மன்னார் மாவட்ட இந்துக் குருமார் பேரவையின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை மன்னார் நகர மண்டபத்தில் சைவசமய எழுச்சி மாநாடு இடம் பெற்றது.

இந்துக் குருமார் பேரவையின் தலைவர் மகா. தர்மகுமாரக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் மன்னார் பாலத்தில் இருந்து விழா மண்டபம் வரை நடராஜர் திருவுருவுடன் எழுச்சிப் பேரணி இடம் பெற்றது.

நிகழ்வில் வண. விஜயபாபுக் குருக்கள் வரவேற்புரை ஆற்றினார். ஆசியுரையை வண நா.பிரபாகரக் குருக்கள் ஆற்றினார். திருக்கேதீஸ்வர ஆலய வளைவின் முக்கியத்துவம் என்ற பொருளில் திருக்கேதீச்சர ஆலயப் பிரதமகுரு வண தி.கருணானந்தக் குருக்களும் திருக்கேதீச்சரம் அன்றும் இன்றும் என்ற பொருளில் திருக்கேதீச்சர ஆலய செயலாளர் செ. சி. இராமகிருஷ்ணனும் கருத்துரைகளை வழங்கினர்.

பாலாவித் தீர்த்தச் சிறப்பு என்ற பொருளில் தமிழருவி த. சிவகுமாரனும், திருக்கேதீச்சரச் சிறப்பு என்ற பொருளில் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகனும், மன்னாரில் இந்துக்கள் என்ற பொருளில் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசனும், இந்துசமய வாழ்வியல் என்ற பொருளில் யாழ். சின்மயா மிஷன் முதல்வர் சுவாமி சிதாகாசானந்தாவும் சிறப்புரைகளை ஆற்றினர்.


















## ஆழியவளையில் ரவைகள் மீட்பு !

யாழ்ப்பாணம், ஒக். 01

ஆழியவளையில் கடற்படையினர் நேற்றுமுன்தினம் நடத்திய தேடுதல் நடவடிக்கையின்போது ரி 56 ரக துப்பாக்கிக்கு பயன்படுத்தப்படும் 41 ரவைகள் மீட்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ஐ)



# முடிவை மீள்பரிசீலனை செய்கின்றதாம் ஐ.நா.!

## இராணுவத் தளபதி கூறுகிறார்

கொழும்பு, ஒக். 01

ஐ.நா. அமைதிப்படையில் இருந்து இலங்கைப் படையினரை வெளியேற்றும் முடிவு தொடர்பாக, ஐ.நா. மறுபரிசீலனை செய்து வருவதாக இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

கண்டி – தலதா மாளிகையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் –

ஐ.நா. அமைதிப்படையில் இலங்கைப் படையினர் பங்கேற்பது தொடர்பான முடிவை ஐ.நா மறுபரிசீலனை செய்து வருகிறது.

இது தொடர்பாக, இன்னமும், ஐ.நா அதிகாரபூர்வமான அறிவிப்பை வெளியிடவில்லை.

வேலைநிறுத்தப் போராட்டங்களினால் சீர்குலைந்துள்ள அவசர சேவைகளை மீண்டும் வழங்குவதற்கு அரசால் உதவி கோரப்பட்டால், எந்த நேரத்திலும் ஒத்துழைக்க இராணுவம் தயாராக இருக்கிறது.



இராணுவம் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தத் தன்னால் முடிந்த அனைத்தையும் செய்து வருகிறது, இது தொடர்பாக ஏற்கனவே பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்று தெரிவித்தார். (ஐ)

## ஊனமுற்ற இராணுவத்தினரின் போராட்டம் நிறைவுக்கு வந்தது

கொழும்பு, ஒக். 01

கோட்டை ரயில் நிலையத்திற்கு எதிரே உண்ணாவிரதம் இருந்த ஊனமுற்ற இராணுவத்தினரின் போராட்டம் நிறைவுக்கு வந்துள்ளது.

ஓய்வூதியம் வழங்குமாறு வலியுறுத்தி கடந்த 20 நாள்களாக இடம்பெற்ற இந்த போராட்டம் நேற்று நிறைவடைந்துள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட விசேட தேவையுடைய முப்படையினர், பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையின் அனைத்து உறுப்பினர்களுக்கும் ஓய்வு பெற்ற பின்னரும் அவர்கள் இறுதியாக பெற்ற சம்பளத்திற்குச் சமனான ஓய்வு ஊதியம் வழங்க கடந்த வாரம் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அவர்கள் உயிருடன் இருக்கும் காலம் வரை இந்த ஓய்வு ஊதியம் வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

இருப்பினும் தொடர்ந்தும் ஊனமுற்ற இராணுவத்தினர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவந்தமை குறிப்பிடத்தக்கது.

# இ.தொ.காவின் நிபந்தனையற்ற ஆதரவையும் ஐ.தே.க நிராகரிப்பு?

கொழும்பு, ஒக். 01

ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவுக்கு நிபந்தனையற்ற ஆதரவளிப்பதற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் முன்வந்தபோதும், அதையும் ஐ.தே.க நிராகரித்துவிட்டதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

அமைச்சர் மங்கள சமரவீரவுக்கும், இ.தொ.கவுக்குமிடையில் நடக்கவிருந்த பேச்சை மங்கள இறுதி நேரத்தில் இரத்து செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தமது 30 அம்சக் கோரிக்கையை ஏற்றுக்கொள்பவரையே ஆதரிப்பதென இ.தொ.கா. பகிரங்கமாக அறிவித்திருந்தது. அதை, இரண்டு தரப்பு வேட்பாளர்களும் ஏற்றுக்கொள்ளாத நிலையில், அடுத்த நாடாளுமன்றத் தேர்தலைக் குறிவைத்து நிபந்தனையற்ற ஆதரவை ஐ.தே.கவுக்கு வழங்குவதாக இ.தொ.கா. தெரிவித்திருந்தது.

இ.தொ.கவைக் கூட்டணிக்குள் உள்ளீர்க்க தமிழ் முற்போக்குக் கூட்டணி எதிர்ப்பை வெளியிடுவதாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலும், அனைத்துக் கட்சிகளையும் கூட்டணிக்குள் கொண்டு வருவதற்குத் தாம் எதிர்ப்பில்லையென மனோ கணேசன் நேற்றுத் தனது முகப்புத்தகத்தில் சூசகமாகக் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# யாழ்.பல்கலையில் நேற்று ஊழியர்கள் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஒக். 01

யாழ். பல்கலைக்கழகத்தில் 21ஆவது நாளாக பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள கல்விசாரா ஊழியர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டம் யாழ். பல்கலைக்கழக முன்றிலில் நேற்று பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டது

சம்பள உயர்வு உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நாடளாவிய ரீதியில் 27 பல்கலைக்கழகங்களின் கல்விசாரா ஊழியர்கள் பணிப் பகிஷ்கரிப்பில் 21 நாள்களாக ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)




## சர்வதேச முதியோர், சிறுவர் தின நிகழ்வுகள் இன்று இருபாலையில்

யாழ்ப்பாணம், ஒக். 01

இருபாலை தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் சர்வதேச முதியோர் மற்றும் சிறுவர் தின நிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5மணிக்கு கட்டப்பிராய் முத்துமாரி அம்மன் திருமண மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இருபாலை கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் பாக்கியராசா பிரதீபன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ். மாவட்ட செயலக முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி இணைப்பதிகாரி இரட்ணசிங்கம் அமலன் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு அதிதிகளாக கிராம உத்தியோகத்தர் எம்.ஆர்.ஜெயதரன், சமுர்த்தி உத்தியோகத்தர் என்.உமாகாந்தன், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் வி.மாதவன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக கிராம உத்தியோகத்தர் திருசெல்வம் ஜேசுதாஸ், நல்லூர் லயன்ஸ் கழக தலைவர் சின்னத்துரை இலட்சுமிகாந்தன், மக்கள் ஆதரவு மையத்தின் பணிப்பாளர் சண்முகலிங்கம் சுரேந்திரன், உதயம் கலாசார சங்கத்தின் இணைப்பாளர் தியாகராஜா நிசங்கன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்வில் முதியோர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். (ஐ)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.10.2019 இல் வெளியிடப்பெற்றது.